Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

குடும்பத் தலைவிகளுக்கு ஓர் செய்தி

ஊறுகாய் வகைகள், அனைத்து தானிய மா வகைகள், அயடீன் கலந்த உப்பு, ரசப் பவுடர், திடீர் தோசைமா, அப்பக்கலவை, பேக்கிங்பவுடர் இன்னும் பல நீங்கள் பெற்றிட.

M.G.M உற்பத்திப் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்களான

முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ்

777 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். Phone : 222 7894

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 05 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 06 (21.10.2004) வியாழக்கிழமை இதழ்: 20

# அடுத்த ஆண்டு பாதுகாப்பு செலவு 5,630 கோடி ரூபாவாக உயர்கிறது!

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவினத்துக்காக இந்த வருடத்தை விட மேலதிகமாக 422 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக நிதியமைச்சர் சரத் அமுனுகமவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நிதியமைச்சர் சமர்ப்பித்த இந்தச் சட்டமூலத்தின் அடிப்படையில் அடுத்த ஆண்டில் 5,630 கோடி ரூபாவை பாதுகாப்புச் செலவினமாக ஒதுக்கீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது இந்த வருடத்துக்கான பாதுகாப்புச் செலவினத்தைவிடவும் எட்டு சதவீத அதிகரிப்பாகும்.

இந்த ஆண்டு5208 கோடிரூபாவை அரசாங்கம் பாதுகாப்புச் செலவினமாக ஒதுக்கீடு செய்திருந்தது.

இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படை ஆகியவற்றை உள்ளடக்கிய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கே இந்த நிதியொதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இதேவேளை பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு அமைச்சுக்கு இதைவிட மேலதிகமாக 235 கோடி 46 லட்சத்து 20 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சின் கீழுள்ள பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தம் நடைமுறையில் இருக்கின்ற நிலையிலும் அரசாங்கம் பாதுகாப்புச் செலவினத்துக்கான பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்ய முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். நோக்கி வந்த பஸ் நாவற்குழியில் தடம்புரண்டு 20 பயணிகள் காயம்!

(யாழ்ப்பாணம்)

முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினிபஸ் ஒன்று நாவற்குழிப் பகுதியில் இன்னொரு பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்டவேளை தடம்புரண்டதில் இருபது பயணிகள் காயமடைந்தனர்.

காயமடைந்தோரில் 12 பயணிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் நாவற்குழிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சி இழுபறியில்; தமிழ்மக்கள் நம்பிக்கையிழப்பு!

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்!

### திருமலையில் தமிழ் இளைஞர் பலி!

(திருகோணமலை)

திருகோணமலை - அன்புவழிபுரத்தில் வைத்து தமிழ் இளைஞர் ஒருவர் நேற்றிரவு சுட்டுக்கொல்லப்பட்டார்.

அன்பு வழிபுரம் சந்திக்குச் சமீபமாக அமைந்துள்ள விஞ்ஞான நிலையத்தின் முன்பாக நேற்றிரவு 7.50 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இதன்போது கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை யோகிநாதன் (வயது - 25) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

அன்புவழிபுரத்தில் தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்த இந்த இளைஞரை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள்அழைத்துச் சென்று அன்புவழிபுரம் சந்திக்கு சமீபமாகவுள்ள விஞ்ஞான நிலையம் முன்பாக சுட்டுக் கொன்று விட்டு சென்றதாகத் தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

### தெகிவளையில் படையதிகாரி மரணம்!

(கொழும்பு)

கொழும்பு - தெகிவளையில் வைத்து இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரியாக முன்ன்ர் பணியாற்றிய ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தெகிவளை - மெல்பேட் கிரசன் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு வாகனம் ஒனறில் சென்று கொண்டிருந்தபோதே கப்டன் மொகமட் சுரேஷ் காசிம் என்ற முன்னாள் இராணுவ அதிகாரி சுடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுகேகொடவைச் சேர்ந்த இவர் இராணுவ புலனாய்வுப் பிரிவில திருமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பணியாற்றியபோது, பலவேறு படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்தார்.

கப்டன் தரத்தில் பணியாற்றிய இவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

### முஸ்லிம் வியாபாரி உயிரிழப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகனேரி குளத்துமடுவில் நேற்றுமுன்தினம் இரவு முஸ்லிம் விறகு வியாபாரியொருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த மொகிதீன் மொகமட் ஹனீபா (வயது 27) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை வீட்டிலிருந்து மாட்டுவண்டில்களில் சக வியாபாரிகளுடன் காட்டுக்குள் சென்று தங்கியிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இவர்கள் இரவு உணவு அருந்திக்கொண்டிருந்த சமயம் கைக்குண்டுச் சத்தமும், துப்பாக்கி வேட்டுச் சத்தமும் கேட்டதாகவும், அந்தவேளை இவர்கள் ஓடிய சமயம் துப்பாக்கிச் சன்னங்கள் இவர் மீது பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் புலிகளின் பிரதிநிதிகள் எடுத்துரைப்பு!

(கொழும்பு)

**சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் இழுபறிக்குள்ளாகியிருப்பதால் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து வருவதோடு – தென்பகுதியில் சமாதானத்துக்கு எதிரான சக்திகள் பலம்பெற்று வருகின்றன என்று –**

**நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனிடம் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எடுத்துரைத்தார்.**

ஒஸ்லோவில் நேற்றுக்காலை 10 மணியளவில் விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் நோர்வே வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின்போதே சு.ப. தமிழ்ச்செல்வன் இவ்வாறு குறிப்பிட்டார். நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாம்பழம் சந்திக்கு அருகே பஸ்கள் விபத்தில் சிக்கின!





(யாழ்ப்பாணம்)

அரியாலை - மாம்பழம் சந்திக்கு அருகில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்தொன்றில் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரண்டு பஸ்கள் பாதையை விட்டு விலகி குளம் மற்றும் மதகுக்குள் பாய்ந்தபோதும் பயணிகள் அதிஷ்டவசமாக உயிர்தப்பினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரண்டு பஸ்களில் ஒன்று முகமாலையிலிருந்து யாழ். நோக்கியும் மற்றையது யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை நோக்கியும் சென்று கொண்டிருந்தபோது மாம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR Your friend in the skies...

## சாவகச்சேரி வைத்தியசாலை
# அபிவிருத்தி சபையை இயக்க உடன் நடவடிக்கை எடுங்கள்
## பொதுமக்கள் கோரிக்கை

சாவகச்சேரி வைத்தியசாலையின் அபிவிருத்திசபையை உடன் இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் இயங்கமுடியாத நிலையிலிருந்த இந்த வைத்தியசாலை, மக்கள் மீளக் குடியமர்ந்த பின் மீள இயங்கத் தொடங்கியது. ஆனால் எந்தவித அபிவிருத்தி வேலைகளும் இங்கு முன்னெடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்களின் அடிப்படை வசதிகளை பூர்த்திசெய்யவும் துரித அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்கவும் அபிவிருத்திச்சபை இயங்குவது முக்கியமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் காலம் தாழ்த்தாது பிரதேச வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அபிவிருத்திசபையை இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் பல தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (17)

# 2வது தொகுதி பட்டதாரிகளின் நியமனக் கடிதங்கள் வந்தன

வேலையற்ற பட்டதாரிகளின் இரண்டாம் தொகுதியினருக்கான பயிற்சி நெறிக்கான நியமனக் கடிதங்களை திறைசேரி பிரதிச் செயலாளர் எஸ்.மீ.திவாரத்ன அனுப்பிவைத்துள்ளார். இந்தக் கடிதங்கள் கடந்த இரண்டு தினங்களாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தென்மராட்சி பகுதியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான பயிற்சிநெறி இன்று முற்பகல் 9.00 மணிக்கு கொடிகாமம் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளை ஒரு வாரத்திற்குள் இந்தப் பயிற்சிநெறிக்கு இணைய வேண்டும் என்றும் இணைந்து கொள்ளாதவர்கள் பயிற்சி நெறியில் அக்கறை எடுக்கவில்லையென கருதி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.மாநகரசபையின் அனுமதியின்றி
# அமைக்கப்படும் கட்டடங்களை உடைக்க நீதிமன்றம் உத்தரவு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் மாநகரசபையின் அங்கீகாரமின்றியும், வீதி எல்லைக்கோட்டுக்குட்படவும் கட்டப்படும் சகல கட்டடங்களின் உரிமையாளர்களுக்கெதிராகவும் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது அங்கீகாரமின்றியும் வீதி எல்லைக்கோட்டுக்குள்ளும் அங்கீகாரமின்றி கட்டப்பட்ட இருபது கட்டட உரிமையாளர்களுக்கு எதிராக யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிறவுண் வீதியிலுள்ள அங்கீகாரமற்றதும் வீதி எல்லைக் கோட்டுக்குள் கட்டப்பட்டதுமான கட்டடம் எதிர்வரும் டிசெம்பர் 07ந் திகதிக்கு முன்னர் உடைக்கப்பட வேண்டுமென நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. உரிமையாளர் அவ்வாறு அகற்றத் தவறும் பட்சத்தில் மாநகர சபையால் உடைத்து அகற்றப்படலாம் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## ஐக்கிய நாடுகள் தினம்

உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடாத்தும் ஐக்கியநாடுகள் தினத்தையொட்டி விசேட கருத்தரங்கு இன்று காலை 9.15 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு ஐக்கியநாடுகள் தினமும் உலக சமாதான தினமும் என்ற தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

## மண்ணெண்ணை விநியோகம் ஆரம்பம்

பெற்றோல், டீசல் மட்டும் விற்பனைசெய்யப்பட்டு வந்த சித்தங்கேணி எரிபொருள் நிலையத்தில் நேற்று முதல் மண்ணெண்ணை விநியோகமும் ஆரம்பித்துள்ளதாக சங்கானை ப.நோ.கூ.சங்கத் தலைவர் ம.சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் நன்மைக்காக இவ் ஏற்பாட்டைச் செய்துள்ளதாக அவர் தெரிவித்தார். (48)

## பொதுக்கூட்டம்

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்த பொதுக்கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு சமாசப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கடற்றொழில் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் கலந்துகொள்ளும் இந்தக் கூட்டத்தில் சமாசத்துக்கான புதிய இயக்குநர் சபைத் தெரிவு இடம்பெறவிருக்கிறது. (21)

## வாணி விழா

யாழ்.மாநகர சபை ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் வாணி விழா நாளை நண்பகல் 12 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நலன்புரிச் சங்கத்தின் தலைவர் கலாநிதி க.குணராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் எதிலும் எந்த இடத்திலும் என்ற தலைப்பில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சொற்பொழிவாற்றுவார்.

✦ ✦ ✦

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்துமாமன்றத்தினால் நடாத்தப்படும் வாணிவிழா இன்று காலை 9.30 மணிக்கு இந்துமாமன்றத் தலைவர் சு.பிறேமன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் பிரதமவிருந்தினராக கலந்துகொள்வார்.

✦ ✦ ✦

புங்குடுதீவு ஸ்ரீகணேசா மகா வித்தியாலய வாணிவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் என்.கே.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் தீவக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசா பிரதம விருந்தின்ராக கலந்துகொள்வார்.

✦ ✦ ✦

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரி சங்கத்தால் நாளை காலை 11.30 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் வாணிவிழா இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை சாவகச்சேரி நலன்புரிசங்கம் ஏற்பாடு செய்து வருகிறது. (29)

## சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றிபெற்றோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்க தேசிய சாரண வாரத்தை ஒட்டி பருத்தித்துறை மாவட்ட சாரண கிளைச் சங்கத்தால் நடாத்தப்பட்ட சாரணர்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தாவைச் சேர்ந்த நா.நகுலேஸ்வரன் முதலாமிடத்தையும் கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியைச் சேர்ந்த கு.ஜனாவிந இரண்டாம் இடத்தையும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியைச் சேர்ந்த சிவகரன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (14)

## மூன்றாவது மதிப்பீட்டுப் பரீட்சை நாளை

(தென்மராட்சி)

வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட விஞ்ஞான செயற்திட்டத்தின் கீழான மூன்றாவது மதிப்பீட்டு பரீட்சை நாளை பி.ப 1.00 மணிக்கு தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

மதிப்பீட்டு வினாத்தாள்களை சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (29)

## தையல் போட்டிகள் பிற்போடப்பட்டது

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளிடையே எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவிருந்த ஆரம்பக்கல்வி பிரிவிற்கான தையல் போட்டிகள் பிற்போடப்பட்டதாக வலயக்கல்விக் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் 31ஆம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அரசரத்தினம் ஜெயக்குமார் என்பவரது அடையாள அட்டையும் (78287386V), சாரதி அனுமதிப் பத்திரமும் (DL No - A007 105661) உடுப்பிட்டிக்கும் வல்வெட்டித்துறைக்கும் இடையிலுள்ள கம்பர்மலை வீதியில் தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நமது ஈழநாடு அலுவலகத்திலோ அல்லது பத்தினி அம்மன் கோயில், வல்வெட்டி T.P.: 071 2228392 என்னும் முகவரியிலோ ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல் அ.ஜெயக்குமார். (967)








ராஜா யாழ்ப்பாணம்.
இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான
ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த
7/G றெயின்போ காலனி
பு.நே 10.30, 2.30, 9.30மட்டும்
ரீக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்
(சி-2725)


# புற்றளை மகாவித்தியாலயத்தில் கணினி நிலையம் திறப்பு

பருத்தித்துறை புற்றளை மகாவித்தியாலயத்துக்கு பழைய மாணவர் ஒருவரால் கணினி நிலையம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இதனை அண்மையில் இந்தப் பாடசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினா சுரேஸ் பிரேமச்சந்திரன் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கணினி அறிவை வளர்க்க இது பெரிதும் உதவியாக இருக்குமென தெரிவிக்கப்படுகிறது. (14)

# கட்டணம் செலுத்தத் தவறிய தொலைபேசி அழைப்பு துண்டிப்பு

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியில் கட்டணம் செலுத்தப்படாத தொலைபேசிகள் அழைப்பு எடுக்கும் வசதி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

நீண்டகாலமாக பொதுமக்களால் கட்டணம் செலுத்தாமல் பாவிக்கப்பட்ட தொலைபேசிகளே அழைப்பு எடுப்பதற்கான இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் மாலுசந்தியில் அமைந்துள்ள ரெலிக்கொம் அலுவலகத்துக்கு முன்பாக பொதுமக்கள் பலர் முண்டியடித்து தொலைபேசிக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக திரண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (14)

# கட்டைக்காடு – மாமுனை வீதி திருத்தவேலை ஆரம்பம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரிவில் மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையிலான 18.2 கி.மீ தூரம் கடற்கரை வீதி உலக உணவுதிட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுவருகிறது.

கடந்த 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாதை புனரமைப்பு வேலைகள் - மதகுகள் திருத்தி அமைக்கப்பட்டதால் களிமண்வேலைகள் தாமதப்படுத்தப்பட்டுவருகிறது. இதனால் இந்தப் பாதையினால் பயணஞ்செய்பவர்கள் பெரிதும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்போது களிமண் போடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மழைகாலம் ஆரம்பித்திருபபதனால் பெரிதும் கஷ்டத்தின் மத்தியில் இந்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (21,17)



பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் சிறந்த பண்ணையாளராகத் தெரிவுசெய்யப்பட்ட கே.இராஜ்குமாருக்கு தும்பளை சாரதா ஆசிரம சுவாமி சித்ருபானந்தா பரிசுவழங்குவதைக் காணலாம். (14)



அண்மையில் வடமராட்சியில் நடந்த அலைபாடும் பரணி இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வில் யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் முதல் இறுவெட்டை வெளியிடுவதையும் மேஜர் ரோமின் தந்தை கணபதிப்பிள்ளை பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம். (12)



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நிகொட் நிறுவனத்தினரால் அமைக்கப்படவுள்ள மாடிக்கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவதற்கு வருகை தந்த நெதர்லாந்து தூதுவர் பிளாங்காட்டை கல்லூரி அதிபர் திருமதி சுகுமார் வரவேற்று பாண்ட் வாத்தியங்கள் சகிதம் அழைத்துச் செல்வதைக் காணலாம். (14)

### ரணில் பதவியேற்பு

# ஒளிப்பதிவு செய்வதை தடுத்தது அடிப்படை மனித உரிமை மீறல்

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க - கடந்த 2002 ஆம் ஆண்டில் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்த வைபவத்தை, ஒளிப்பதிவு செய்யச் சென்ற ரி.என்.எவ். தொலைக் காட்சி செய்தியாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டமை, நியாயமற்ற செயல் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பாலபத்தபெண்டி, ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி, அரசாங்கத்தின் முனனாள் செய்திப் பணிப்பாளர் ஆகியோரால் இந்த வைபவத்தை ஒளிப்பதிவு செய்யும் உரிமை மறுக்கப்பட்டதாக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

அரசியலமைப்பின பிரகாரம், சாதாரண பொதுமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவேண்டியபோது, அரசியற்காரணங்களுக்காக அவை மீறப்பட்டுள்ளமை அடிப்படை மனித உரிமை மீறல் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்த ரி.என்.எல் தொலைக்காட்சிச் செய்தித் தயாரிப்பாளருக்கு - 5 ஆயிரம் ரூபா நஷ்டஈடும், 2 ஆயிரத்து 500 ரூபா செலவுக் கட்டணத்தையும் வழங்குமாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

# இலங்கையின் சமாதான முயற்சியிலிருந்து பின்வாங்கவோ, தளர்வடையவோ வேண்டாம்

## நோர்வேயிடம் புளொட் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சியில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படினும், அந்த முயற்சியிலிருந்து பின்வாங்கவோ, தளர்வடையவோ வேண்டாம் என புளொட் அமைப்பு நோர்வேயை வலியுறுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இலங்கைக்கான விசேட சமாதான ஏற்பாட்டாளர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்த புளொட்டின் நோர்வே அமைபபின் பொறுப்பாளர் ராஜன் இவ்வாறு வலியுறுத்தினார்.

எரிக் சொல்ஹெய்மின் அழைப்பின் பேரில், அவரைச் சந்தித்த புளொட் அமைப்பின் நோர்வேப் பொறுப்பாளர் ராஜன் - புலம்பெயர்ந்து ஐரோப்பாவில் வாழும், புகலிடம் கோரிய இலங்கைத் தமிழர்களை மீண்டும் திருப்பி அனுப்ப, பல ஐரோப்பிய நாடுகள் முனைவதாகவும், அதனை உடன் தடுத்து நிறுத்தவேண்டும் எனவும் கோரியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இலங்கையின் வடக்கு-கிழக்கு உட்பட தெற்கிலும் கொலைகள் தொடர்வதாகவும், இலங்கையில் யுத்த நிறுத்தம் தொடருகிறபோதிலும், உண்மையான அமைதி இன்னும் ஏற்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியதாகத் தெரிவித்த அவர் -

மூன்றாந்தரப்பு ஏற்பாட்டாளர் என்ற வகையிலும், யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு தலைமை தாங்குவதென்ற வகையிலும், இலங்கையில் முழுமையான அமைதி ஏற்படவில்லை என்பதை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வலியுறுத்துவதன் மூலம், திருப்பியனுப்பும் நடவடிக்கையை நிறுத்த முடியும் எனவும் நோர்வேக்கான பொறுப்பாளர் ராஜன் - எரிக் சொல்ஹேமிடம் வலியுறுத்தியதாகக் கட்சித் தகவல்கள் தெரிவித்தன. (01)

# எப்போதும் எமது நேச சக்திகளாகவே முஸ்லிம் மக்களை எண்ணுகின்றோம்

## திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன்



(திருகோணமலை)

**முஸ்லிம் மக்களை - எமது இனத்தின் சகோதரர்களாகவும், அவர்கள் எமது நேச சக்திகளாகவுமே எப்போதும் எம்மால் எண்ணப்படுகின்றனர் என்று - நேற்றுமுன்தினம் மூதூர் பள்ளி வாசலில் நடைபெற்ற இஸ்லாமிய பொது மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோண மலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின்- திருகோணமலை மாவட்டப் பயணத்தின் ஒரு கட்டமாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு சகிதம் - எழிலன், மூதூர் பகுதி இஸ்லாமிய பொதுமக்களையும், மார்க்க அறிஞர்களையும் மூதூர் பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரை சந்தித்து நீண்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள், அதில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் மற்றும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூவின மக்களுடனான புரிந்துணர்வு செயற்பாடுகள் குறித்து விளக்கும் முகமாகவும், இஸ்லாமிய மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் ஒரு முயற்சியாகவும் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக அறிய முடிகிறது.

இந்தச் சந்திப்பில் எழிலன் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எமது தமிழ் தேசியப் பிரச்சினையை நாம் பேச்சுவார்த்தை மூலமோ அல்லது போரின் மூலமோ, ஏதோ ஒரு வழியில் தீர்த்துக் கொள்ளத்தான் போகின்றோம்.

அவ்வாறு ஒரு தீர்வு எட்டப்பட்ட பின்னர் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழர்களாகிய எம்முடன், தற்போது இங்கு வாழும் இஸ்லாமிய சகோதர்களும், சிங்கள சகோதர்களும் தொடர்ந்தும் சேர்ந்து வாழத்தான் வேண்டும்.

அதிலும் குறிப்பாக மொழியால் ஒன்றுபட்டு, பல்வேறு நடைமுறைகளால் ஒருமித்த தன்மையுடையவர்களாகக் காணப்படும் இஸ்லாமிய சகோதரர்கள் - எம்முடன் ஒன்றிணைந்து வாழவேண்டியது அவசியமானது.

கடந்த காலத்தில் ஒற்றுமையுடன் இருந்த நாமும், இஸ்லாமியச் சகோதர்களும் திட்டமிட்ட பேரினவாத சக்திகளின் சதிகளில் சிக்கி, முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டதை நாம் மறைப்பதற்கு இல்லை.

சிங்களப் பேரினவாத சக்திகளின் பிரித்தாளும் சதியில் சிக்கி, சில இஸ்லாமிய சகோதரர்கள் தமிழ் இனத்துக்கு எதிராகச் செயற்பட்ட பல சம்பவங்கள் இங்கே நடந்து முடிந்துள்ளது.

நடந்தவைகளைக் களைந்து, இனி நடப்பது நல்லதாக அமைய வேண்டும் என்ற அடிப்படையில், நாம் ஒன்றுபட்டு செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

'முஸ்லிம் சகோதரர்கள் - சிங்கள இனத்தவருடன் இணைந்து வாழ்வது முடியாத ஒன்று. அதேவேளை மொழியாலும், பழக்கவழக்கங்களாலும் ஒன்றுபட்ட தமிழர்களாகிய எம்முடன் இணைந்து வாழ்வது என்பது யதார்த்தமான ஒரு விடயம்.

என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில் -

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக எம்மத்தியில் இதுவரை இருந்து வந்த பல சந்தேகங்கள்- இப்போது விலகியுள்ளது.

எதிர்காலத்தில் தமிழர்களும், இஸ்லாமியர்களும் இந்த மாவட்டத்தில் ஒற்றுமையுடன் வாழ முடியும் என்ற நம்பிக்கை தற்போது துளிர்த்துள்ளது என்று குறிப்பிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் முஸ்லிம் பிரதிநிதிகளுடன், தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். (01)

## மட்டக்களப்பில் சோதனை தீவிரம்

மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் பொலிஸார் மற்றும் படையினரின் சோதனைக் கெடுபிடி அதிகரித்திருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

கிங்ஸ்லி இராசநாயகம் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே, சோதனை நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டதாகவும், மோட்டார் சைககிள்கள் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொள்ளையிட முயன்றோர் கைது

மருதானை மருந்தகம் ஒன்றைக் கொள்ளையிடச் சென்ற நால்வரை மருதானைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று மாளிகாவத்தை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்தக் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் அதிதீவிரமான அரசியல் கட்சியுடன் தொடர்புபட்டவர்கள் எனவும், அதில் ஒருவர் அந்தக் கட்சியின் முன்னாள் முக்கியஸ்தர் எனவும் தகவல்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்டவேளை ஒரு துப்பாக்கியும் இருந்ததாக உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவித்தது.

# இராணுவ சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் நாற்பது பேருக்கு உடனடி இடமாற்றம்

(கொழும்பு)

உடனடியாக செயற்படும் விதத்தில் இராணுவத்தின் மேஜர் ஜெனரல்கள் 2 பேர், பிரிகேடியர் 13 பேர், கேணல் 9 பேர் உட்பட சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் 40 பேர் இடமாற்றம் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய இராணுவப் பேச்சாளர் பதவிக்கு கல்குடாவில் 232 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றிய பிரிகேடியர் தயாரத்ன நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவப் பேச்சாளராக இருந்த கேணல் சுமேத பெரேரா இராணுவத் தலை மையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த இடமாற்றங்கள் அனைத்தும் நாளை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இராணுவச் செயலாளராகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் எகொடவெல - அடுத்தமாதம் முதலாம் திகதியுடன் இளைப்பாறிச் செல்வதால், இராணுவத் தலைமையகத்துக்கு அவர் இடமாற்றப்பட்டு, அவர் முன்னர் வகித்த பதவிக்கு என்.ஆர்.விதாரணகே நியமிக்கப்பட்டார்.

இராணுவத்தின் வரவு - செலவு மற்றும் நிதி நிர்வாகப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால இராணுவத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

9 கேணல்கள், 5 லெப்டினன்ட் கேணல்கள், சிரேஷ்ட கேணல்கள் 11 பேருக்கும் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்தாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# அரைகுறை டொக்டர்கள் 40 ஆயிரம் பேர் சேவையில்

வெளிநாடுகளில் மருத்துவக் கல்லூரியில் பயின்றவர்களில் சுமார் 4 ஆயிரம் பேர் அரைகுறையான டொக்டர்கள் என மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் கிளினிக் வைத்து நடத்துவதோடு, தனியார் மருத்துவ மனைகளில் ஆலோசகர்களாகவும் செயற்படுகின்றார்கள் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இத்தகைய அரைகுறை டொக்டர்களின் மோசடிகளைத் தடுப்பதற்கு எத்தகைய நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தனியார் கிளினிக்குகளை நடத்தும் சிலர் - உண்மையான வைத்தியர்களாக இருந்த தமது தந்தையரின் பதிவு இலக்கத்தைப் பயன்படுத்தும் அதேநேரம், வியாபாரப் பதிவு இலக்கங்களையும் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கும் பல டொக்டர்மாரில் அநேகமானோர் போலிச் சான்றிதழ்களையும் வைத்திருக்கின்றனர்.

இதேவேளை சிலர் பேலி ஆவணங்கள்கூட இல்லாமலும் இருக்கிறதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# உத்தியோகபூர்வமான அறிக்கை வெளியிடுவதை ஒத்திவைத்தார் தேரர்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவுக்குள் ஏற்பட்டுவரும் முரண்பாடுகளால, உடுவே தம்மலோக தேரர் - தனது உத்தியோகபூர்வ அறிக்கை வெளியிடுவதை பிற்போட்டுள்ளதாக தெரிவித்தார்.

நேற்று அவரால் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்ட விசேட அறிக்கை எதிர்வரும் இரண்டு வாரங்களின் பின் வெளியிடப்படும் எனத் தெரிவித்த அவர் -கட்சியின் ஆலோசனைக் குழுவின் வேண்டுதலுக்காகவே தனது அறிக்கை வெளியிடும் முடிவைப் பிற்போட்டுள்ளதாக தெரிவித்தார்.

எனினும், ஊடகவியலாளர் மாநாட்டில் உடகவியலாளரின் கேள்விகளுக்கு இடமளிக்கப்படவில்லை.

இதனிடையே ஏற்க்னவே தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி உட்பட, கட்சியின் அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் விலகிக் கொள்வதாக, கொலன்னாவ சுமங்கல தேரர் எழுதிய கடிதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என கட்சியின் தலைவர் எல்லாவல மேதாணந்த தேரர் தெரிவித்தார். (01)

# வீரப்பனுக்கும் - புலிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாம்

## சிங்கப்பூர் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

தமிழ் நாட்டில் சுட்டுக்கொல்லப்பட்ட வீரப்பன் - தமிழீழ விடுதலைப் புலிகளோடு நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்ததாக, சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வீரப்பனால் பிரபல நடிகர் ராஜ்குமார் கடத்திச் செல்லப்பட்ட சந்தர்ப்பத்தில், அவரைக் காப்பாற்றுவதற்கு தமிழ் நாட்டு அரசு - வீரப்பனிடம் அனுப்பியது புலிகளின் தீவிர ஆதரவாளரான பழ.நெடுமாறனையே.

புலிகளோடு தொடர்புடைய, தமிழ் நாட்டின் பாட்டாளி மக்கள் கட்சியுடன் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வீரப்பன் ஆயத்தமாக இருந்ததாகக்கூறும் அந்தப் பத்திரிகை - தமிழ் நாட்டை இரண்டாகப் பிரிப்பதே வீரப்பனுடைய நோக்கமாக இருந்ததாகவும் கூறியுள்ளது.

வீரப்பன் விடுதலைப் புலிகளோடு தொடர்பு வைத்திருந்ததாக, தமிழ் நாட்டின் முன்னாள் பொலிஸ்மா அதிகாரி சிதம்பரமும் கூறியிருந்ததாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (தே)

## பாகிஸ்தானுடனான முதல் டெஸ்ட்

# இலங்கை 7 விக்கெட் இழப்பிற்கு 233 ஓட்டங்களைப் பெற்றுள்ளது!



(டாக்கா)

இலங்கை் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று பைசலாபாத்தில் ஆரம்பமாகிய முதலாவது டெஸ்ட்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் இலங்கை அணி, நேற்றைய ஆட்டநேர முடிவின் போது 7 விக்கெட்டுக்களை இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணித்தலைவர் அத்தபத்து முதலில் தமது அணி துடுப்பெடுத்தாடும் எனத்தெரிவித்தார். இதன்படி அவரும் ஜெயசூரியாவும் ஆரம்ப ஆடடக்காரர்களாக களமிறங்கியபோது முதல் ஓவரிலேயே சொகைப் அக்தரின் பந்து வீச்சில் ஓட்டமெதுவும் பெறாமல் எல்.பி.டபிள்யூ முறையில் அத்தபத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ஜெயசூர்யாவுடன் இணைந்து சங்ககார ஆடவந்தபோதும் அவரும் இரண்டு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அத்தரின் பந்து வீச்சில் இம்ரான் பர்கத்திடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் ஜெயவர்த்தன வந்தார் அவரும் 5 பந்துகளைச் சந்தித்து ஓட்டமெதனையும் பெறாமல் சமியின் பந்து வீச்சில் விக்கெட் கீப்பர் மொயின்கானிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். இந்த நிலையில் இலங்கை அணி 9 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுக்களை இழந்து பெரும் நெருக்கடியைச் சந்தித்தது.

இதை அடுத்து ஜெயசூாயவுடன் இணைந்து சமரவீர ஆடத் தொடங்கினார். இருவரும் சிறப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில் சனத் 38 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் சமியின் பந்து வீச்சில் அசிம் கமலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவ்வேளை அணி 77 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பின்னர் முபாரக், சமரவீரவுடன் இணந்தார் இவரும் 34 ஓட்டங்களுடன் சமியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இகன்பின் களுவிதாரண 4, வாஸ் 22, ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.



தற்போது சமரவீர 97, ரங்கனஹேரத் 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்து வீச்சில் அக்தர், சமி இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும் டனிஸ் கனேரியா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## மேசைப்பந்தாட்ட தெரிவு அணிக்கு இந்தியாவில் பயிற்சிக்கு ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து மேசைப்பந்தாட்ட அணி தெரிவு செய்யப்பட்டு பயிற்சிக்காக இந்தியாவுக்கு அழைத்துச்செல்லப்படவிருப்பதாக யாழ்.மாவட்ட மேசைப் பந்தாட்டத் தலைவர் க.இராசதுரை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

யாழ் மாவட்ட ரீதியாக 13 ஆவது, 15 ஆவது, 19 ஆவது வயதுப் பிரிவுகளும் வயதுக் கட்டுப்பாடற்ற பிரிவிலுமாக ஆண், பெண் அணிகள் தெரிவுசெய்யப்பட்டு எதிர்வரும் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள வடக்கு - கிழக்கு மாகாண அணித் தெரிவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாண அணிக்கு தெரிவு செய்யப்படுவோர் எதிர்வரும் டிசம்பர் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள பயிற்சி முகாமிற்கும், போட்டிக்கும் இலங்கை மேசைப் பந்தாட்ட சங்கத்தால் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

யாழ்.மாவட்ட அணித்தெரிவு நாளை காலை 9.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் இதில் வீரும்புவோர் பங்கேற்கலாம் எனவும் யாழ்.மாவட்ட மேசைப் பந்தாட்டச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.




## கடைசி டெஸ்டில் விளையாட பொண்டிங் விருப்பம் தெரிவிப்பு!

(சிட்னி)

இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாட அவுஸ்ரேலிய கப்டன் பொண்டிங் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் கப்டன் ரிக்கி பொண்டிங் ஐ.சி.சி. சம்பியன் கோப்பை போட்டியின்போது காயம் அடைந்தார். இதையடுத்து சிகிச்சைக்காக அவர் தாயகம் திரும்பினார்.

மருத்துவ ஆலோசனைக்குப் பின்னர் அவர் ஓய்வு எடுத்துவருகிறார். முதல் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடாத அவர் மும்பையில் நடக்கும் கடைசி டெஸ்ட் போட்டியில் ஆட பொண்டிங் அதிக விருப்பத்துடன் உள்ளார்.

இதற்காக அவர் தீவிர பயிற்சி செய்து வருகிறார். ஆனால் பொண்டிங் இன்னும் உடல் தகுதி பெறவில்லை. 3ஆவது டெஸ்ட்போட்டியின் முடிவை பொறுத்து அணியில் இடம் பிடிப்பது குறித்து பொண்டிங் முடிவுசெய்வார் என்று கூறப்படுகிறது.

## தீவிர பயிற்சியில் டெண்டுல்கர் தகுதியை நிரூபிக்க 3 நாள் கெடு!



(மும்பை)

உடல் தகுதியை நிரூபிக்க 3 நாட்கள் கெடு விதித்திருப்பதால் டெண்டுல்கர் தீவிர துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்தர ஆட்டக்காரர் சச்சின் டெண்டுல்கர் முழங்கை வலி காரணமாக கடந்த ஒகஸ்ட் மாதத்தில் இருந்து ஓய்வு எடுத்து வருகிறார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் அணியில் டெண்டுல்கர் இடம்பெற்ற போதும் உடல் தகுதி பெறாத காரணத்தால் அவர் களம் இறங்கவில்லை. பெங்களூர் மற்றும் சென்னை டெஸ்ட் போட்டிகளில் டெண்டுல்கர் ஆடவில்லை.

இந்த நிலையில் வருகிற 26 ஆம் திகதி நாக்பூரில் தொடங்கவுள்ள 3 ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடும் நம்பிக்கையில் டெண்டுல்கர் காத்திருக்கிறார். இதற்காக நேற்றுமுதல் டெண்டுல்கர் மும்பையில் தனது பயிற்சியை ஆரம்பித்துள்ளார்.

மருத்துவர்களின் ஆலோசனைப் படி அதிக கவனத்துடன் டெண்டுல்கர் பயிற்சி மேற்கொண்டார். சென்னைப் போட்டியின் போது டெண்டுல்கர் நீண்டநேரம் பந்து வீசினார். ஆனால் துடுப்பாட்டப் பயிற்சி எதனையும் அவர் மேற்கொள்ளவில்லை.

கடந்த 2 மாத இடைவெளிக்குப் பின்னர் முதல் முறையாக டெண்டுல்கர் நேற்று முன்தினம் துடுப்பாட்டப் பயிற்சி செய்தார். 2 மணிநேரம் இந்தப் பயிற்சி நீடித்தது. பயிற்சிக்குப் பின்னர் டெண்டுல்கர் நிருபர்களிடம் கூறுகையில் -

இப்போதுதான் பயிற்சி தொடங்கி உள்ளேன். இப்போது என்னுடைய கையில் எந்த வலியும் இல்லை. இருந்தபோதிலும் அதிக கவனத்துடன் நான் பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். அடுத்த டெஸ்ட போட்டியில் கண்டிப்பாக ஆடுவேன்.

இதற்கிடையே இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் நாயர் கூறுகையில் - டெண்டுல்கர் தனது உடல்தகுதியை நிரூபிக்க இன்னும் 3 நாட்கள் கெடு விதிக்கப்பட்டுள்ளது. இதற்குள் அவர் உடல் தகுதி பெற்றால் மட்டுமே 3 ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடுவார் என்றார்.

## ஓய்வுக்காக கில்கிறிஸ்ட் சிங்கப்பூர் பயணமானார்!



(சென்னை)

அவுஸ்ரேலிய அணிக் கப்டன் கில்கிறிஸ்ட் ஓய்வுக்காக சென்னையில் இருந்து சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றார்.

இந்திய - அவுஸ்ரேலிய இரு அணிகள் மோதும் 3ஆவது டெஸ்ட்வரும் 26ஆம் திகதி. நாக்பூரில் நடக்கவுள்ளது. முழுமையாக 5 நாட்கள் ஓய்வு எடுக்கும் வாய்ப்பு ஏற்பட்டதையடுத்து அவுஸ்ரேலிய அணி கப்டன் கில்கிறிஸ்ட் சென்னையிலிருந்து சிங்கப்பூர் புறப்பட்டு சென்றார்.

5 நாட்கள் அவர் சிங்கப்பூரில் ஓய்வு எடுத்த பின்னர் போட்டி நடக்கும் நாக்பூருக்கு வரத்திட்டமிட்டுள்ளார். அவுஸ்ரேலிய அணியின் மற்றவீரர்கள் கோவா நகரை சுற்றிப் பார்க்க சென்றிருக்கிறார்கள்.

## நியூஸிலாந்துடனான டெஸ்ட்

# 177 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் சுருண்டது

டாக்காவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான பங்களாதேஷ், நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் பங்களாதேஷ் அணி 177 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது.

வங்கபந்து தேசிய மைதானத்தில் ஆரம்பமான இந்தப் போட்டியில் பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

ஆனால், அந்த அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தது. நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சைச் சமாளிக்க முடியாமல் 5 ஓட்டங்களில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

ஆனால், அஷ்ரபுல்லின் சிறப்பான ஆட்டத்தால் (67 ஓட்டங்கள்) அந்த அணி சரிவிலிருந்து மீண்டது. முதல்நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 165 ஓட்டங்கள் என்ற கௌரவமான ஓட்ட எண்ணிக்கையை எட்டியது.

காயமடைந்த கப்டன் ஹபிபுல்பசாருக்குப் பதிலாக காலித்மசூத் இந்தப் போட்டியில் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார். ஆட்டநேர முடிவில் மசூத் 12 ஓட்டங்களுடனும், மஞ்சுரல்ரானா 16 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

போட்டியின் இரண்டாவது நாளான நேற்று ஆட்டம் தொடங்கியபோதே பங்களாதேஷ் அணி தடுமாறத் தொடங்கியது.

16 ஓட்டங்களுடன் ரானா ஆட்டமிழந்ததையடுத்து பங்களாதேஷ் அணிக்கு விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரியத் தொடங்கின. அடுத்தடுத்து ரானா, ராபிக் ஆகியோரின் விக்கெட்டுக்கள் வீழ்ந்தன.

அடுத்து பாஸ்யா, தாரிக் அஸின் ஆகியோரும் 12 ஓட்டங்களைப் பெறுவதற்குள் ஆட்டமிழந்ததால், பங்களாதேஷ் அணி 177 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

இதில் பிராங்ளின் 5 விக்கெட்டுக்களையும், ஓரம் 3 விக்கெட்டுக்களையும், விற்றோரி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து நியூஸிலாந்து அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

றிசசட்சனும், சின்கிளயரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். நியூஸிலாந்து அணி மிகவும் நிதானமாக நிலைத்து நின்று ஆடுவதில் குறியாக இருந்தது.

எனினும், 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் றிச்சட்சன் ஆட்டமிழந்தார். சின்கிளேயருடன் பிளமிங் இணைந்து ஆடிக்கொண்டிருந்தபோது ரானாவின் பந்துவீச்சில் அவரும் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ஸ்ரபுல் 2 ஓட்டங்களை மட்டுமே பெற்றநிலையில் ஆட்டமிழந்தார். இதனையடுத்து துடுப்பெடுத்தாடிய அஸ்ரிலும் 11 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ஆட்டமிழக்க நேர்ந்தது.

நியூஸிலாந்து அணி 139 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், நிதானமாக ஆடிக்கொண்டிருந்த சின்கிளேயரும் 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

ஆட்டநேர முடிவில் ஒரம் 18 ஓட்டங்களுடனும், மக்கலம் 48 ஓட்டங்களுடனும், ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது நியூஸிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 207 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றைய ஆட்டத்தில் ரபீக் 3, ரானா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.



# கல்வி, கலை, கலாசார நிகழ்வுகளுக்கு எதிரியாக முளைத்துள்ள தொலைக்காட்சி

## மகாஜனசபை கலைஞர்வட்ட தலைவர் விஜயபாஸ்கரன் தெரிவிப்பு

(அளவெட்டி)

எமது கல்வி, கலை கலாசாரத்துக்கான பிரதான எதிரியாக இன்று தொலைக்காட்சி விளங்குகின்றது. சிறுவர்கள் தொடக்கம் வளர்ந்தவர்கள் என அனைவருமே தொலைக்காட்சி எனும் மாயைக்குள்ளேயே அமிழ்ந்து கிடக்கிறார்கள் வடிசாராயம் குடிக்கும் குடிகாரர்களைப்போல இன்று மட்டும் பார்ப்போம் எனத் தொலைக்காட்சிக்குள்ளே தமது காலத்தை எமது மக்கள் வீணே கழிக்கிறார்கள் என அளவெட்டி மகாஜன சபை கலைஞர் வட்ட தலைவர் வை. விஜயபாஸ்கரன் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்ட நவராத்திரிதின கலைவிழா நிகழ்வுகளில் தலைமைதாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

இன்று நாம் போர் ஓய்ந்துள்ளதாக எண்ணுகிறோம். ஆனால், இன்னும் போர் ஓயவில்லை. தற்போது நாம் பல போர்களுக்கு முகம் கொடுக்கவேண்டியவர்களாக உள்ளோம். அரசியற்போர், தொழிற்துறைப்போர், பொருளாதாரப் போர் என நீளும் இந்தப் போர்களில் மிக முக்கியமானதாகக் கலாசாரப் போரும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

எமது இனத்தை அடியோடு அழிக்கவேண்டுமாக இருந்தால் குண்டுகளைப்போட்டு எம்மைக் கொல்லத்தேவையில்லை. எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை அடியோடு அழித்தால் நாம் இயல்பாகவே அழிந்துவிடுவோம். தமிழர்கள் என்ற சுயத்தைத் தொலைத்துவிடுவோம்.

இன்று பிறதேசத்துக் கலாசார நிகழ்வுகளுக்கு எமது மக்கள் அதிகமாக வரவேற்பு அளிக்கும் நிலையால் சொந்த கலாசார நிகழ்வுகள், சொந்த மண்ணிலேயே தோற்றுப் போகின்றன. வெளிநாடுகளிலே பிறந்த எமது தமிழ்ப் பிள்ளைகள் இங்கிருந்து ஒளிப்பதிவு செய்யப்பட்டு அனுப்பப்படும் கலை நிகழ்வுகளை- நாங்கள் எவ்வாறு ஆபிரிக்க வேடர்களின் கலை நிகழ்வுகளைப் பார்க்கின்றோமோ அதைப்போலவே அவற்றைப் பார்க்கின்றனர்.

அவர்களுடைய சூழல் அவ்வாறு இருப்பதனால் அவர்களைத் தவறுசொல்லமுடியாது. ஆனால், சொந்த மண்ணிலே அவ்வாறானதொரு நிலைதோன்ற அனுமதிக்க முடியாது. எமது மக்களுடைய மனங்களிலே மாற்றங்கள் ஏற்படவேண்டும். பாரம்பரிய கலைவடிவங்களை மதித்து எதிர்கால சந்ததிக்கு அவற்றிலே பற்றை ஏற்படுத்தவேண்டும்.

இவ்வாறானதொரு நிலையிலேயே நவீன தொழில்நுட்ப வல்லமை பொருந்திய தொலைக்காட்சி எமக்கான வலுவான எதிரியாக முளைத்துள்ளது. ஒரு மனிதன் உறங்கும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் மூன்றிலொரு பகுதியை தொலைக்காட்சியுடன் செலவழிக்கின்றான். எமது மாணவர்களுடைய கல்விகூட இதனால் பாதிக்கப்படுகிறது. பாடசாலைகளிலே தவணை முடிவுகளின் பெறுபேறுகளைப் பார்வையிடும்போது பெற்றோர்கள் தாம் இனிமேல் பிள்ளைகளைத் தொலைக்காட்சியின் பக்கம் விடவேமாட்டோம என உறுதியளிப்பார்கள். ஆனால், அடுத்த தவணையிலும் அவர்கள் அதே உறுதிமொழியையே அளிக்கும் அவலநிலையே காணப்படுகிறது.

இன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான விளம்பரங்கள் தெருவழியேயும் விளம்பரப்படுத்தப்படுகின்றன. ஆரியகுளத்திலே இவ்வாறு வைக்கப்பட்டுள்ள விளம்பரமொன்றுக்கு கழிவு ஓயில் ஊற்றப்பட்டுள்ளது. நான் நினைக்கிறேன், யாரோ பாதிக்கப்பட்ட கலைஞரோ அல்லது பெற்றோரோ தான் இதனைச் செய்திருக்கவேண்டும்.

இன்று சமைப்பது பிரச்சினையாக இல்லை, சாப்பிடுவதுதான் பிரச்சினையாகவுள்ளது. கலைநிகழ்ச்சிகளைத் தயாரிப்பது இலகுவாகவுள்ளது. ஆனால், அவற்றைப் பார்வையாளர்கள் பார்வையிடுவதுதான் குறைவாகவுள்ளது எனவும் தெரிவித்தார்.

முன்னதாக இந்த நிகழ்வில் வாழ்த்துரையை வலிவடக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.இராஜகோபாலும், சிறப்புரையை அளவெட்டி மகாஜனசபை சனசமூக நிலையத் தலைவர் வை.சுப்பிரமணியமும் நிகழ்த்தினர். (94)

# விஷமிகளின் விசமத்தனத்தால் அளவெட்டி தெற்கில் மின்தடை

விஷமிகளின் செயல் காரணமாக அளவெட்டி தெற்குப் பகுதிக்கான மின்சாரம், மின்சாரசபையால் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில நாட்களாக இந்தப் பகுதியை சேர்ந்த சில விஷமிகள் சைக்கிள் செயின்களை மின்சார வயர்கள்மேல் எறிந்து மின்சாரத்தை நிறுததிவந்தனர். அதேவேளை, இன்னொரு பகுதியினர் உடனடியாக திருத்தவேலை மேற்கொண்டு மின் இணைப்பை மீண்டும் ஏற்படுத்தி வந்தனர்.

தினமும் இந்தச் செயற்பாடு கடந்த இரு வாரங்களுக்கு மேலாக தொடர்ந்து வந்துள்ளது. இது தொடர்பாக மின்சார சபைக்கு தெரியப்படுத்தப்பட்டபோது இந்தப் பகுதிக்கு வந்த மின்சாரசபை ஊழியர்கள் மீள் திருத்த வேலைகளை மேற்கொண்டதுடன், இனிமேலும் இவ்வாறான செயற்பாடுகள் தொடருமாகவிருந்தால் நிரந்தரமாக மின்சாரம் இடைநிறுத்தப்படுமென எச்சரிக்கை விடுத்தும் சென்றனர்.

இதனையும் கருத்திற்கொள்ளாது விஷமிகளின் விசமத்தனம் தொடர்ந்ததால் நேற்றுமுன்தினம் தொடக்கம் மின்சாரசபையினரால் அளவெட்டி தெற்குப்பகுதிக்கான மின்சாரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுவதற்கான முன்முயற்சிகளாக இது இருக்கலாமெனவும் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்த விஷமிகளின தொல்லை தாங்க முடியாமல் அளவெட்டி தெற்கு அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (94)

# பூசைகளின்றி பூட்டிய நிலையில் நெடுந்தீவு இந்து ஆலயங்கள்!

நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்கள் கடந்த பல மாதங்களாகப் பூசைகள் இன்றிப் பூட்டிய நிலையில் உள்ளமையால் நாளாந்த வழிபாடுகள் நடத்தவும் மற்றும் வீட்டு, பொது கிரியைகளை மேற்கொள்ளல் போன்றவற்றிற்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆலயங்களுக்கென நியமிக்கப்பட்ட பூசகர்கள் நெடுந்தீவைவிட்டு வெளியேறிச் சென்றமையாலும், புதிய பூசகர்கள் நெடுந்தீவில் பணியாற்ற சம்மதிக்காமையினாலும் பெரும் நெருக்கடிநிலை உருவாகி யுள்ளது.

இதேவேளை பெருமளவான நிதியைச் செலவுசெய்து ஆலயங்கள் புனரமைக்கப்பட்டு இப்போது பூட்டிய நிலையில் இருப்பதுவும், இது தொடர்பாக இந்துமத அமைப்புக்கள் எதுவும் பாராமுகமாக இருப்பதுவும் மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# யாழ்.செயலகத்தில் நவராத்திரி விழா!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம் நடத்தும் நவராத்திரி விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சிறப்புச் சமயச் சொற்பொழிவாக சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், 'அபிராமி கடைக்கண்களே' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துவார். கலைநிகழ்வுகளாக கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலய மாணவர்கள் வழங்கும் நடன நிகழ்வும், 'குருபக்தி' என்று குறுநாடகமும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் வழங்கும் 'இந்து விழிப்பு' என்னும் கதம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (24)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ஜீ.சுருதிகா
முகவரி : கிளிநொச்சி

இரண்டாவது அகவையில்



பெயர் : கி.சுகிர்தா
முகவரி : பண்டத்தரிப்பு

மூன்றாவது அகவையில்



பெயர் : இ.பாதுஷா
முகவரி : வரணி

ஏழாவது அகவையில்



பெயர் : சுபரம்மியா ஏற்றினி
முகவரி : ஏழாலை வடக்கு

எட்டாவது அகவையில்



பெயர் : தி.சுகன்ஜா
முகவரி : அல்வாய் தெற்கு


# கன்ரர் வாகனம் தடம்புரண்டு கோண்டாவிலில் 7பேர் காயம்

(கோண்டாவில்)

கோண்டாவில் சந்தியில் வேகமாகச் சென்ற கன்ரர் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில் அதில் பயணம்செய்த ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் நண்பல் 12 மணியளவில் கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலைக்கு அண்மையாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதில் கோண்டாவிலைச் சேர்ந்த ந.பார்த்தீபன் (வயது 21), ஐ.சிறிதரன் (வயது 35) இ.தீபராஜ் (வயது 19) த.சந்திரமோகன்(வயது 52) க.சிவலிங்கம் (வயது 48) கொழும்புத்துறையைச் சேர்ந்த சி.சிவலிங்கம் (வயது 58) சங்கரத்தையைச் சேர்ந்த மு.திரு ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

மரணச்சடங்கு ஒன்றிற்காக சென்றவர்கள் இறுதிக்கிரியையை முடித்துவிட்டு கன்ரர் ஒன்றில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# நெடுந்தீவிலிருந்து கால்நடைகளை கொண்டுசெல்வதற்கு அனுமதி!

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் இருந்து வியாபார நோக்கத்திற்காகவும், சொந்தத் தேவைக்காகவும் கால்நடைகளை வெளயிடங்களுக்குக் கொண்டு செலவதற்கான அனுமதி தற்போது நெடுந தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையூடாக வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் கால்நடை ஏற்றுவதற்கான அனுமதிகள் வழங்குதல் வெளியாரின் தலையீட்டால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமையால் பெருமளவு கால்நடை வளர்ப்போர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது அனுமதி வழங்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால், நெடுந்தீவில் உள்ள கால்நடை வளர்ப்போர் தங்களது வருமானங்களைத் ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கசிப்புக்குகை சிக்கியது

(உரும்பிராய்)

உரும்பிராய் மேற்கு விதானை வீதிப் பகுதியில் திருட்டுத்தனமாக இயங்கிய கசிப்புக்குகை ஒன்று கோப்பாய் பொலிஸாரிடம் சிக்கியது. இந்தச் சம்பவம் கடந்த 17 ஆம் திகதி இரவு 9 மணியளவில் இடம்பெற்றது. பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் கசிப்பு கோடா பரல்கள் மற்றும் ஆறு கலன்களில் கசிப்பும், உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்களையும் கைப்பற்றினர். (82)

## மரம்நாட்டு விழா

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலகப் பணிமனையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை மரம்நாட்டு விழா இடம்பெற்றது. பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கான புதிய வளாகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.வசந்தகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (14)

## மைதானத்தில் சிரமதானம்

சாவகச்சேரி மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானம் படையினரால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. கல்லூரி அதிபர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, கடந்தவாரம் சில தினங்கள் படையினரால் மைதானத்தில் வெடிபொருட்கள் இருக்கிறதா என்று பரிசோதனையை மேற்கொண்டு மைதானப் பகுதியை துப்புரவு செய்தனர்.

இந்த மைதானம் மாணவர்களால் பயன்படுத்தப்பட்டபோதிலும் மைதான சுற்றாடலில் பற்றைகள் வளர்ந்து மிதிவெடி அச்சம் காரணமாக சிலபகுதி பயன்படுத்தப்படாமல் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (29)

## நவராத்திரி விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக நலன்புரிக் கழகம் நடாத்தும் நவராத்திரி விழா இன்று பிற்பகல் 1 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும். (24)



யாழ்.பல்கலைக்கழக 4 ஆம் வருட மருத்துவபீட மாணவர்களால் எழுவைதீவில் நடத்தப்பட்ட மருத்துவமுகாமை மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதையும் படத்தில் காணலாம். (113)

# தகுந்த அறுவடை மூலம் பழங்களை மேலும் சுவையூட்டலாம்



பழவகைகள் அறுவடை பெற்ற பின்னர் பழுக்கும் பழங்கள் அல்ல. எனவே, இந்த வகையான பழவகைகள் முற்றிப் பழுத்த பிறகு பழுக்க வைக்கவேண்டும். சந்தைக்கு அனுப்புவதற்காக முற்றாத காய்களைப் பெற்றுக் கொண்டால்



மரக்கறி வகைகளைப் பயிரிடும் விவசாயிகளைப் போலவே பழவகைகளைப் பயிரிட்டு விற்பனைக்கு அனுப்புபவர்கள் இருக்கிறார்கள். சில வகையான பழவகைகள் வருடம் முழுவதும், சில வகையான பழவகைகள் வருடத்தில் குறித்த காலப்பகுதியிலும் விளைச்சலைத் தரக் கூடியன. சந்தையில் எப்போதும் பழ வகைகளுக்கென்று தனியிடம் உண்டு.

பழங்கள் பழுக்கும் விதத்துக்கு ஏற்றவாறு அவற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். மாங்காய், பப்பாசி, வாழை போன்ற பழவகைகள் அறுவடை பெற்றுக் கொண்ட பின்னரே பழுக்க வைக்கப்படுகின்றன. ஆனால், அன்னாசி, தோடம்பழம், தேசிக்காய், நாரத்தங்காய் போன்ற பின்னரே விளைச்சலைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

கறுத்தக் கொழும்பான், வெள்ளைக் கொழும்பான், விலாட், வாழை ஆகியவை நன்றாக முற்றிய பின்னர் விளைச்சலைப் பெற வேண்டும். அதன் அதில் வாசமும், சுவையும் குறைந்து விடும். பழம் வெம்பி விடவும் வாய்ப்புண்டு.

பப்பாளிப் பழத்தைச் சந்தைக்குக் கொண்டு செல்லும்போது, அவை நசியும் சந்தர்ப்பங்கள் உண்டு. பொதுவாக முற்றிய பச்சை நிறமாக இருக்கும் போது, விளைச்சலைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால், 25 வீதம் பச்சை நிறமான தோல் - மஞ்சள் நிறமாக மாறிய பின்னர் விளைச்சலைப் பெறுவதால், பப்பாசிப் பழம் நன்றாக பழுப்பதோடு, சுவையாகவும் இருக்கும்.

விளைச்சலைப் பெற்ற பின்னர், பழுக்காத பழவகையான அன்னாசியை தகுந்த காலத்தில் அறுவடை செய்து கொள்ள வேண்டும். இல்லையெனில், அவற்றின் புளித்தன்மை அதிகரிப்பதுடன், உண்ணும் பொழுது வாயை அரிக்கும் தன்மை காணப்படும்.

தோடம்பழம் முற்றிய பின்னர் அதனுடைய மேல் தோல் மென்மையாகக் காணப்படும். அத்தோடு, தோலின் பச்சை நிறம் மாறி, குருத்துப் பச்சை நிறமாக மாறும். அதன் பின்னர் பிடுங்கிக் கொள்ளலாம்.

எனவே, பழங்களை அவற்றின் பிரிவுகளுக்கேற்ப விளைச்சலைப் பெற்றுக் கொள்வதால், பழங்களுடைய சுவை பழுதடையாத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளலாம். அத்தோடு, சந்தை வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளலாம்.

சசி சந்திரகாசன்

# நாற்று மேடையமைப்பில் தங்கியுள்ள பல்லினப் பயிர்ச்செய்கை முறை!

சில குறிப்பிடப்பட்ட மரக்கறிப் பயிர்களெல்லாம், ஆரம்பத்தில் ஐரோப்பியரால் மலை நாட்டுப் பகுதியில் மட்டுமே பயிரிடப்பட்டன. படிப்படியாக இந்த மரக்கறிகள் பொதுமக்களிடையே பிரபல்யமடைந்ததால், இவை பயிரிடப்படும் நிலப்பரப்பும் அதிகரித்தது. மேலும் பொருத்தமான இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக, இந்தப் பயிர்ச்செய்கை தாழ் நிலப் பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியது. மலைநாட்டு மரக்கறிகள் என அழைக்கப்படும் கோவா, லீக்ஸ், முள்ளங்கி, பீற்றூட் போன்றவை தற்போது மலைநாட்டுப் பகுதிகளிலும், தாழ் நிலப்பகுதிகளிலும் பயிரிடப்படுகின்றன.

### மரக்கறிகளை வளர்க்கும் முறை

கரட், முள்ளங்கி, போஞ்சி என்பன நேரடியாகத் தோட்டத்தில் நாட்டப்படும். கோவா, பூக்கோவா, நோகோல்ட், பீற்றூட், லீக்ஸ், சலாது ஆகியன தோட்டத்தில் நாட்டப்படுவதற்கு முன்னர் - விசேடமாகத் தயாரிக்கப்பட்ட மேடைகளில் வளர்க்கப்படுதல் வேண்டும். இந்த மரக்கறிகள் பலபகுதிகளில் பயிரிடப்பட்டாலும், பெரும்பாலான நிலப்பரப்பு இன்னும் மலைநாட்டுப் பகுதியிலேயே காணப்படுகின்றது.




நுவரேலியாப் பகுதியில் இந்த மரக்கறிப் பயிர்களெல்லாம் பொதுவாகப் பல்லினப் பயிர்ச்செய்கை முறையில் பயிரிடப்படுகின்றன. பல்லினப் பயிர்ச்செய்கை முறையில் பல்வேறு பயிர்களிலிருந்தும் தொடர்ச்சியான அறுவடை பெறுதல், சிறிய நிலப் பரப்பை உச்ச அளவுக்குப் பயன்படுத்தல். பூச்சிகள், நோய்கள் போன்றவற்றின் குறைவான தாக்கம் பல்லினப் பயிர்ச்செய்கையில் காணப்படும் முக்கியமான நன்மைகளாகும்.

**☆ கரட்டும், பீற்றூட்டும் ஒரே நேரத்தில் நாட்டல் -**

இந்தப் பயிர்கள் ஒரு மாதப் பருவமாக இருக்கும் போது, அதே மேடைகளில் 6 - 8 வாரப் பருவு முள்ள லீக்ஸ் நாற்றுக்கள் நாட்டப்படும். இந்த முறையில் பீற்றூட் முதலிலும், அதனைத் தொடர்ந்து கரட்டும், இறுதியாக லீக்ஸும் அறுவடை செய்யப்படும்.

**☆ மேற்கூறப்பட்டது போல் கரட் முதலிலும், பீற்றூட் பிந்தியும் ஒரே மேடையில் நாட்டல் -**

இந்த மேடைகளில் ஓரத்தில் சலாது நாட்டப்படும். ஒரு மாதத்தின் பின்னர் லீக்ஸ் இதே மேடைகளில் நடப்படும். இங்கு முதலில் சலாதும், இரண்டாவதாக பீற்றூட்டும், மூன்றாவதாக கரட்டும் இறுதியாக லீக்ஸும் அறுவடை செய்யப்படும்.

**☆ மூன்றாவது முறையில் கோவாவும், சலாதும் கலந்து பயிரிடப்படல்-**

கோவாப் பயிர் மேடைகளில் சலாது மேடையின் ஓரங்களில் நாட்டப்படும். சலாது முதலில் அறுவடை செய்யப்படும். அதனைத் தொடர்ந்து கோவா அறுவடை செய்யப்படும்.

### நாற்று மேடை

சிறந்த விளைச்சல் பெறவேண்டுமாயின், சிறந்த நாற்று மேடை அவசியம். விளைவின் அரைப் பகுதிக்கு மேல் சிறந்த நாற்று மேடைப் பராமரிப்பிலேயே தங்கியிருக்கின்றது.




தரை இலகுவில் நீர் பெறக் கூடியதாகவும், சிறந்த வடிகால் வசதியுடையதாகவும், திறந்த வெளியாகவும் இருப்பது நல்லது.

சிறந்த நீர் வடிப்பை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு, தரையைக் குறைந்தது 20 சென்ரி மீற்றர் ஆழத்துக்காவது பண்படுத்தவும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட தரையில் 10-12 சென்ரி மீற்றர் உயரத்தில் மேடைகளை அமைக்கவும். மேடைகளை 65 - 75 சென்ரி மீற்றர் அகலத்திலும், வசதியான நீளத்திலும் அமைத்துக் கொள்ளலாம்.

இந்த மேடையின் மேல் பகுதியை அரிக்கப்பட்ட கூட்டெரு 50 சதவீதத்தையும், மேல் மண் 50 சதவீதத்தையும் கலந்த கலவையால் நிரப்பிக்கொள்ளவும். இந்தக் கலவையின் உயரம் 5-8 சென்ரிமீற்றர் ஆக இருத்தல் வேண்டும். மேடைகளை நெல் உமி, வைக்கோல் அல்லது அவை போன்ற பிற பொருட்களை இட்டு, எரித்துத் தொற்று நீக்குவது சிறந்தது. எறும்பு பிரச்சினையாகவுள்ள இடத்தில் உரிய கிருமி நாசினியைப் பயன்படுத்தவும்.

தயாரிக்கப்பட்ட மேடைகளில் விதைகளை 10-15 சென்றி மீற்றர் இடைவெளியுள்ள வரிசையில் விதைத்தல் வேண்டும். பயிர்கள் நெருக்கமாக வளர்வதைத் தவிர்ப்பதற்கு, விதைகளை ஐதாக விதைக்கலாம்.

நடுகை ஆழம் -2 சென்றிமீற்றருக்கு மேல் அதிகரிக்கக் கூடாது. நடுகையின் பின்னர், விதைகளை ஏற்கனவே தயாரிக்கப்பட மண், கூட்டெருக் கலவையால் மூடுதல் வேண்டும். இந்த மேடைகளுக்கு நீரூற்றுவதற்கு பூவாளியைப் பயன்படுத்தலாம். விதைகளை இட்ட பின்னர் - மேடையை மெல்லிய படை வைக்கோலால் அல்லது சேதமடைந்த சாக்கால் பத்திரக் கலவையாக மூட வேண்டும். நாற்று மேடையில் எறும்புகளின் பிரச்சினை காணப்படுமானால், குறைந்த நச்சுத் தன்மையுள்ள பூச்சி நாசினியைப் பயன்படுத்தலாம்.

சாதாரணமாக இந்த மரக்கறி விதைகள்- 4-5 நாட்களில் முளைகொள்ளும். ஆனால், லீக்ஸ் முளை கொள்ள 7-8 நாட்கள் எடுக்கும் நாற்றுக்கள் வெளித் தோன்றும்போது, அவற்றுக்கு ஏற்படக் கூடிய சேதத்தைத் தவிர்ப்பதற்குப் பத்திரக் கலவையை அகற்றுதல் அவசியம்.

(தொடரும்....)

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | பருத்தித்துறை | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 60/= | 40/= | 50/= | 40/= | 40/= | 60/= | 35/= |
| வெண்டிக்காய் | 25/= | 10/= | 20/= | 30/= | 25/= | 10/= | 40/= | 25/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 70/= | 60/= | 70/= | 80/= | 80/= | 60/= | 70/= |
| கத்தரிக்காய் | 70/= | 50/= | 70/= | 80/= | 70/= | 45/= | 80/= | 70/= |
| பாகற்காய் | 80/= | 80/= | 90/= | 100/= | 60/= | 40/= | 100/= | 70/= |
| கரட் | 40/= | 60/= | 40/= | 50/= | 30/= | 25/= | 60/= | 35/= |
| பீற்றூட் | 30/= | 20/= | 20/= | 30/= | 20/= | 15/= | 40/= | 20/= |
| முருங்கைக்காய் | 30/= | 40/= | 60/= | 80/= | 60/= | 40/= | 100/= | 50/= |
| வெங்காயம் | 50/= | 40/= | 25/= | 30/= | 40/= | 35/= | 40/= | 50/= |
| பச்சை மிளகாய் | 40/= | 50/= | 40/= | 50/= | 60/= | 45/= | 50/= | 45/= |

# தொழில்மலர்



ந.கருணாகரன்

## உற்பத்தியை அதிகரித்து தொழிலை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளோம்

**ஆறுகால் மடத்தைச் சேர்ந்த நவரெத்தினம் கருணாகரன் (கருணா), சீவல் பாக்குத் தொழிலை மேற்கொண்டு வருகிறார். இவர் பாக்குக் கொள்வனவு, அதன் தொழில் முறை, சீவல் பாக்கு விற்பனை, சந்தை நிலவரங்கள் தொடர்பாக எம்முடன் பகிர்ந்து கொண்டவற்றை வாசகர்களுக்காகத் தருகிறோம்.**

யாழ்ப்பாணத்துச் சந்தைகளிலே ஆறுகால்மடம் 'பாக்குச் சீவல்' என்றால் அதற்கொரு தனியிடமுண்டு. இது எமது ஊருக்குக் கிடைத்த கௌரவம் மட்டுமல்ல, எம்மைப் போன்ற தொழிலாளர்களுக்கும் கிடைத்த வெற்றி. சிறுவயதுமுதல் இந்தத் தொழிலுடன் எனக்குத் தொடர்புகள் இருந்தது. எனினும், 1993 ஆம் ஆண்டில் இருந்தே எனது சகோதரர்களின் உதவியுடன் பாக்குச் சீவலைச் சந்தைப்படுத்தி வருகின்றேன்.

தினமும் திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய சந்தைகளில் 250 கிலோகிராம் பாக்குச் சீவலைச் சந்தைப்படுத்தி வருகிறேன். புறநகர்ப் பகுதிகள், கிராமப்புறங்களில் வெற்றிலை வாங்காத வீடுகள் மிக மிகக் குறைவென்றே கூறவேண்டும். 600 கிலோகிராம் சீவல் பாக்கை நாளாந்தம் நுகரக்கூடிய பாவனையாளர்கள் யாழ்ப்பாணத்திலுள்ளனர். சீவல் பாக்கு தென்பகுதியில் இருந்து இங்கு வருவதில்லை. முழுப் பாக்காகவே வருகின்றது. இந்த நடவடிக்கையானது, எமது தொழிலுக்குக் கிடைத்த ஆறுதல் என்றே கூறவேண்டும்.

பாக்குகளில் பல வகைகள் உண்டு. அவை வைரப்பாக்கு, நடப்புப் பாக்கு, வெடியல் பாக்கு என வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றின் தரங்களுக்கமைவாகவே, சந்தை விலைகள் நிர்ணயிக்கப்படுகிறன. இவற்றின் விலைகள் முறையே - 160 ரூபா, 120 ரூபா, 110 ரூபாவாக உள்ளது. வைரப் பாக்குகள் என்றால், தெரிந்தெடுக்கத் தேவையில்லை. அப்படியே சீவி விற்பனை செய்யலாம். நடப்பு, வெடியல் பாக்குகளில் தூள் அடிக்கும். அதனால் அந்தப் பாக்குகளை 20 - 50 மணித்தியாலங்கள்வரை நீரில் ஊறவைக்கவேண்டும். இது பாக்குகளின் தன்மையைப் பொறுத்தே அமையும்.



50 கிலோகிராம் பாக்கை ஊறவைக்கும் போது, 10 கிலோகிராம் அதிகரிக்கிறது. பின்னர் - இதைச் சீவும்போது 10 கிலோ கிராம் தூள் அடிக்கும். எனவே, 50 கிலோ கிராம் பாக்கை ஊறவைத்துச் சீவினால் 50 கிலோகிராம் சீவலைப் பெறமுடியும். பாக்குச் சீவலிலும் - கைச் சீவல், மெசின் சீவல் என்று பிரிக்க முடியும். சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் தடிப்பான சீவல்களையே விரும்புகிறார்கள். தடிப்பான சீவல்களைக் கைச்சீவல் மூலமாகப் பெறமுடியும்.

இயந்திரத்தின் உதவியுடன் ஒரு மணித்தியாலத்தில் 100 கிலோகிராம் பாக்கைச் சீவலாம். ஆனால், கைச்சீவல் பெறவேண்டுமாயின், இரண்டு நாட்கள் பத்துப்பேர் இருந்து சீவினால்தான் 100 கிலோகிராம் சீவலைப் பெறமுடியும். இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்வதனால், வேகம் அதிகரிப்பதுடன், நேரமும் ஊழியச் செலவும் குறைக்கப்படுகிறது. இறக்குமதியாளர்களிடமிருந்தும் பாக்கைக் கொள்வனவு செய்து, அவற்றின் தரத்துக்கேற்ப சீவலை மேறகொண்டு, விற்பனை செய்து வருகின்றோம். 100 கிலோ கிராம் பாக்கைச் சீவும்போது, 20 கிலோ கிராம் பாக்குத் தூள் அடிக்கும். இந்தத் தூள் பாக்கை கிலோ 8 ரூபா - 12 ரூபாவரை பீடா விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்கிறோம். நாம் நேரடியாகப் பாக்கை இறக்குமதி செய்து, சீவி விற்பனை செய்தால் இலாபம் கிடைக்கும் என்றாலும், போக்குவரத்துச் செலவு, வரி, மனித முயற்சி என்பவற்றுக்கு இலாபத்தைப் பகிர வேண்டி ஏற்படும். இதனாலேயே நேரடியாக நாம் பாக்கு இறக்குமதி செய்வதில்லை.

இலங்கையில் இருந்து பாக்குகள் ஏற்றுமதியாகும் காலங்களில் விலைகளில் தளம்பல் ஏற்படுமே தவிர, மற்றைய காலங்களில் மாற்றமில்லை. பொதுவாக சித்திரை மாதத்துக்குப்பின் பாக்கின் விலை கூடுதலாகக் காணப்படும். யாழ்ப்பாணத்தில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்குச் சீவல் ஏற்றுமதி நடைபெறுகின்றது. இது அண்மைக்காலமாக அதிகமாகவே இடம்பெறுகிறது. யாழ்ப்பாணத்துச் சீவலுக்கு ஏனைய மாவட்டங்களில் பெரும் வரவேற்புண்டு. மூன்று இயந்திரங்கள் இருந்த போதிலும், ஒரு இயந்திரத்தைக் கொண்டே உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றோம்.

உற்பத்தியை அதிகரித்துப் பெருமளவில் விற்பனையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். மிக விரைவில் யாழ்ப்பாணத்திலிருந்து ஏனைய இடங்களுக்கு எமது சீவலை ஏற்றுமதி செய்யவுள்ளோம். ஒவ்வொரு தொழிலுக்கும், தொழிலாளர் சங்கம் உண்டு. அந்தச் சங்கமூடாகச் சில சலுகைகள், உதவிகளைப் பெறமுடியும். பாக்குச் சீவல் தொடர்பான அமைப்புக்கள் இல்லை. சிறு முயற்சியாளர்களுக்கான கடன், வேறு சலுகைகள் கிடைத்தால் எமது நடவடிக்கைகளை அதிகரிக்க முடியும்.

மழை காலங்களில் உற்பத்தியின் வேகத்தில் தாமதம் ஏற்படுவதுண்டு. இந்த வேளைகளில் சந்தை வியாபாரிகளை முழுமையாக எம்மால் திருப்திப்படுத்த முடியாமல் இருக்கும். பாக்குச் சீவல் தொழிலை விஸ்தரித்துப் பெருமளவில் விற்பனையை மேற்கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளுடன், மிகத் தீவிரமாகத் தொழிலை மேற்கொண்டு வருகின்றேன் என்றார் கருணாகரன்.

பாக்குச் சீவல் தொடர்பாக முழுமையாக அறிந்து கொண்ட மனநிறைவில் செவ்வியை நிறைவு செய்தோம்.

காவலூர் விஜேந்திரன்

## பொருளின் தரம் பேணப்படும்போது அதனுடைய விற்பனை அதிகரிக்கும்



வியாபாரத்தில் ஈடுபடும் பொருள் உற்பத்தி நிறுவனம் ஒன்று - தனது பொருட்களை விற்க முடியவில்லை என்றால், பொருள் விற்பனையில் ஈடுபடும் வியாபாரி, இடைத்தரகர்கள் என்போருடன் நேரிடையாகத் தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களுடன் கதைத்து அதற்கான காரணத்தைக் கேட்டறிய வேண்டும். காரணங்களைக் கேட்டறிந்து கொண்டதன் பின்னர், அவற்றை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் கண்டறிந்து, விற்பனையின் இடைவெளியைப் பூர்த்தி செய்யும்போது தான், வியாபாரம் செழித்து வளரும்.

பொருட்களை விற்கும் வியாபாரிகளே நுகர்வோருடன் நேரிடையாகத் தொடர்பு கொள்பவர்கள். எனவே, பொருள் உற்பத்தி நிறுவனம் ஒன்று,

தன்னிச்சையாக செயற்பட முடியாது. வியாபாரிகளையும், நுகர்வோரையும் நம்பியே நமது விற்பனையை முன்னெடுக்க வேண்டும்.

காலத்தின் தேவையை அறிந்து, அந்தக் காலப்பகுதியில் எந்த வகையான பொருட்களுக்குக் கூடுதலான கேள்வி உள்ளதோ அந்த வகையான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும். பொதுவாக ஒரு புதிய பொருளை உற்பத்தி செய்து, விற்பனைக்கு விடும்போது, முதலில் அந்தப் பொருள் நுகர்வோரிடம் சென்றடைய சில காலப்பகுதி எடுக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் புதிய பொருட்களுக்கு கேள்வி இல்லை என்ற முடிவுக்கு வந்து விடமுடியாது.

ஒரு பொருளை - நுகர்வோன் கொள் வனவு செய்வதற்குப் பின்வரும் விடயங்கள் தூண்டுதலாக அமைகின்றது.

✳ உற்பத்தி செய்த பொருளின் விலையை நியாயமாக உற்பத்தியாளனின் இலாபம் கருதி, நுகர்வோரின் இலாபம் கருதியும் குறிப்பிடப்படும் போதும்,

✳ பொருளின் விலையை இலகுவாக வாடிக்கையாளர்கள் பார்த்து வாங்கும்படி பொருளின் மேல் விலைப்பட்டியல் ஒட்டப்படும்போதும்

✳ வாடிக்கையாளரின் பார்வையில் இவை படும்போதும் அந்தப் பொருட்களை கொள்வனவு செய்யும் ஆர்வம் தானாகவே நுகர்வோனிடம் ஏற்படும்.

உற்பத்தி செய்த பொருட்களை எல்லா வியாபார நிலையங்களுக்கும் அனுப்பி வைத்ததுடன் தனது வேலை முடிந்தது என ஒரு உற்பத்தி நிறுவனம் இருந்துவிட முடியாது.

விற்பனைக்கு அனுப்பப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு சென்றால், அதற்கான காரணத்தை அறிய முயற்சிக்க வேண்டும்.

அடுத்ததாக நுகர்வோருக்குத் தெரியும்படி வியாபார நிலையங்களில் பொருட்களை அடுக்கி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதனுடைய தரம், பொதி செய்யப்படும் முறையில் கவனம் செலுத்த வேண்டும்.

அளவுக்கு அதிகமாக பொருட்களை உற்பத்தி செய்து வியாபாரநிலையங்களுக்கு அனுப்பி வைக்கக் கூடாது. தேவைப்படும் பொழுது அளவாக, தேவைக்கேற்ப அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொருள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தமது பொருட்கள் அதிகம் விற்பனையாகும் ஒவ்வொரு இடங்களிலும் கிளைகளைத் திறந்து அங்கு பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருந்து, அந்த இடங்களில் உள்ள வியாபார நிலையங்களுக்குத் தேவைப்படும்போது, உடனுக்குடன் கொடுத்து வந்தால் வியாபாரம் பெருகும். பொருட்களும் பழுதடையாமல் பாதுகாக் கப்படும்.

மேலும் கூடுதலான பொருட்கள் விற்பனையாகின்ற என்று மேலதிகமான எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபடாமல் இருந்துவிட முடியாது.

உற்பத்திப் பொருட்கள் விற்பனையாகும்போது, மேலும் மேலும் அந்தப் பொருட்களின் தரத்தை உயர்த்தி காலத்துக்குக் காலம் வடிவமைப்பில் மாற்றம் செய்து, புதிய வடிவில் சந்தைக்குக் கொண்டுவரவேண்டும்.

இலாபத்தைக் கூட்டும் முயற்சியில் மட்டுமே உற்பத்தியை மேற்கொள்ளாது, நுகர்வோர்களின் நன்மை கருதியும், எதிர்காலத்தில் அந்தப் பொருள் நிலைத்து நிற்கக் கூடிய முறையிலும் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும்.

உதாரணமாக - இலங்கையில் உற்பத்தியாகும் லக்ஸ் சோப்பை எடுத்துக் கொண்டால், அதனுடைய நிலையான விற்பனைக்கு தரமும் ஒரு காரணம். இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அந்த வகை சோப் சந்தையில் நிலைத்து நிற்க முடியவில்லை. உலகம் பூராகவும் லக்ஸுக்கு கேள்வி அதிகமாக உள்ளது.

ஒரு பொருளின் தரமே அந்தப் பொருள் என்றும் நிலைத்து நிற்பதற்கு அடித்தளமாகும் என்பதை இதிலிருந்து அறியக் கூடியதாகவுள்ளது. எனவே, எந்தப் பொருளையும் நல்ல முறையில் தரத்துடன் உற்பத்தி செய்யும்போது, கண்டிப்பாக கூடுதலான கேள்வியை எதிர்பார்க்கலாம்.

அத்துடன், வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளின் நிலமையினை கேட்டறிந்து அவர்களுக்கு சலுகைகள் வழங்கி திறமையானர்வகளுக்குப் பரிசுப் பொருட்களைக் கொடுக்கும்போது, அவர்கள் உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் வியாபாரத்தில் ஈடுபடுவார்கள். ✳

## அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தரவின்படி

# கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் மாணவர்களின் வரவு ஒழுங்கற்ற நிலையில்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை களில் கல்விகற்கும் மாணவர்க ளின் வரவு ஒழுங்கற்ற நிலையில் காணப்பபடுகின்றது.

இந்த மாவட்டப் பாடசாலைகளில் இதுவரை 'மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களின்படி, 3 ஆயிரத்து 841 மாண வர்களின் வரவு ஒழுங்கற்றுக் காணப படுகிறது எனத் தரவுகள் தெரிவிக் கின்றன.

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த இழப்புகள் யுத்த அனர்த்தங்கள் காரணமாகவே மாணவர்களின் வரவு ஒழுங்கற்றதாகக காணப்படுகின்றது. இவர்களில் ஆண்கள் 1957 பேரும், பெண்கள் 1884 பேருமாகக் காணப்படுகின்ற னர்.

இதனைவிட 88 மாணவர்களும், 60 மாணவிகளுமாக 148 மாணவர் கள் பாடசாலைக் கல்வியைத் தொடர வேண்டிய நேரத்தில் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளனர்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, குடும்பங்களில் ஏற் பட்ட பிரச்சினைகள் மற்றும் யுத்த அனர்த்தத்தால், குடும்பச் சுமையை சுமக்கவேண்டிய நிர்ப்பந்த நிலை காரணமாகவே இந்த மாணவர்கள் பாடசாலைக் கல்வியை விட்டு இடை விலகியுள்ளதாகத் தெரியவந்துள் ளது.

எனினும், இவர்களது கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தவோ அல்லது இவர்களுக்கான தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவோ இதுவரை எந்தவொரு அமைப்பும் முன்வரவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

## ஜயனார்புரம்

# அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழா!

(கிளிநொச்சி)

வன்னேரிக்குளம் - ஜயனார்புரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை யின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக கிளிநொச்சி வலயப் பிர திக்கல்விப் பணிப்பாளர் சின்னராசா கலந்துகொண்டார்.

தேசியக்கொடியை வன்னேரி வலய அரசியற்துறைப் பொறுப்பா ளர் எழில்குமரன் ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியை பாடசாலை அதிபர் ஏற்றிவைத்தார்.

பாடசாலை வகுப்பு நிலையில் பாடங்களில் கூடுதல்புள்ளி பெற்றவர் களுக்கும், வரவு ஒழுங்கு நன்றாகப பேணுபவர்களுக்கும், கலைத்திறன் போட்டிகளில் முன்னிலை பெற்றவர் களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பரிசளிப்பு விழா மலரை ஆசிரி யர் உதயபவான் வெளியிட்டு வைத் தாா. நிகழ்வின் இறுதியாகப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித் தனர். (ஸ்ரீ)

# அணைக்கட்டில் நீர் வெளியேறுவதால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியாத நிலை

(மன்னார்)

மன்னார் - பள்ளமடு புளியங் குளம் அணைக்கட்டு பழுதடைந்த நிலையில் உள்ளமையால் குளத் தில் உள்ள நீர் வெளியேறிச் செல் கின்றது.

இந்த அணைக்கட்டு நீண்டகால மாகப் புனரமைப்புச் செய்ய வேண் டிய நிலையில் காணப்படுகின்றது. இதனை இதுவரை காலமும் புனர மைப்புச் செய்வதற்காக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை. இதனால் இந்தக் குளத்தில் தேக்கி வைத்துள்ள நீர் வெளியேறு கின்றது.

1989 ஆம் ஆண்டு இராணுவத்தி னர் மேற்கொண்ட தாக்குதல்களால் அணைக்கட்டுக்கள் பழுதடைந்தன. இதனால் குளத்தில் உள்ள நீர் வெளி யேறுவதால் இந்தப் பகுதியில் பயிர்ச செய்கையை மேற்கொள்ளும. 40 இற் கும் மேற்பட்ட விவசாயிகள் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளமுடியாத நிலை தோன்றியுள்ளது.

# கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் 'கொல்சிம்' சிமெந்தின் அறிமுகவிழா!

(கிளிநொச்சி)

'கொல்சிம்' சிமெந்து உற்பத்தி நிறுவனத்தினரும் - கிளிநொச்சி, முல் லைத்தீவு விற்பனை முகவர்களுமா கிய பாண்டியன் வாணிபத்தினரும் இணைந்து கடந்த திங்கட்கிழமை காலை 11.30 மணியளவில் கிளி நொச்சி பண்பாட்டு மண்டபத்தில் அறிமுக விழாவையும், சந்தைப் படுத்தல் கருத்தமர்வையும் நடத்தி னர்.

இந்த நிகழ்வு அறவாணன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் பொதுச் சுடரை தமிழீழ நிர்வாக சேவை துணைப் பொறுப் பாளர் இளஞ்சேரன், முல்லைத்தீவு மாவட்ட ஒப்பந்தகாரர் துரைரட்ணம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். இங்கு தமிழீழ நிர்வாகசேவை துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் உரை நிகழ்த்தினார்.

கொல்சிம் சிமெந்து விற்பனை முகாமையாளர் ரட்ணராஜா விஜய குமார், நிறுவனப் பொறியியலாளர் கள் செறின்ஸ் தயாநந்தன், ஜெய சூரிய ஆகியோர் இந்த சிமெந்தின் தரம்பற்றி விளக்கமளித்தனர்.

அடுத்து பாண்டியன் வாணிபப் பணியாளர் கிருபானி நன்றியுரை நிகழ்த்தினார். அத்துடன் விளக்கப் படமும் காண்பிக்கப்பட்டது. (9)

### நடமாடும் விசாரணை செயலகம்

தமிழீழ காவல்துறையின் கிளி நொச்சி வட்டக்கச்சி காவல் பணி மனையினரால் நேற்றுமுன்தினம் புளி யம்பொக்கணையில் நடமாடும் விசார ணைச் செயலகம் நடத்தப்பட்டது.

புளியம்பொக்கணை பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - நாகேந்திரபுரம், பெரியபுலம் ஆகிய பகுதிகளில் கிடைத்த முறைப்பாடுகள் விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

### குன்றும் குழியுமாக காணப்படும் பூநகரி – அத்தாய் வீதி

பூநகரி - அத்தாய் வீதி படுமோச மாகச் சேதமடைந்துள்ளது. இதனால் இந்தவீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

பூநகரி அத்தாய் கிராமத்தினூ டாக தம்பிராய்வரை செல்கின்ற வீதி குன்றும் குழியுமாக காணப்படுவ தால், பிரயாணம் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

# முழங்காவில் பிரதேசத்துக்கு கெயர் அமைப்பு மானியம்!

கிளிநொச்சி முழங்காவில் பிரதே சத்தில் கெயர் அமைப்பின் திட்டத் தின் கீழ் மானியம் வழங்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் கெயர் நிறு வன திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 35 வீட்டுத்தோட்டப் பயனாளிகளுக் கும், 10 கால்நடை வளர்ப்புப் பய னாளிகளுக்கும் மானியம் வழங்கும் நிகழ்வு பூநகரி - முழங்காவில் அபி விருத்தி நிறுவனத் தலைவர் நவரத் தினம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முழங்காவில் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பா ளர் அகக்குமரன், கெயர் நிறுவன பிரதிநிதிகள், கிராம அலுவலர் உள் ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கென 'உலகதரிசன' நிறுவனத்தால் 11 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணம் வழங்கப்படுவதையும், அருகில் கிளிநொச்சி மாவட்டபிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி உலக தரிசன நிறுவனத்தின் பிரதிநிகள், வைத்திய அதிகாரிகள், மருத்துவதாதி மற்றும் ஊழியர்களையும் முதலாவது படத்திலும், உலதரிசன கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் உரையாற்றுவதையும் இரண் டாவது படத்திலும் காணலாம். *(படம் - இராமநாதபுரம் செய்தியாளர்)*

# பொது நூலகம் இன்மையால் சிரமப்படும் மன்னார் – பாப்பாமோட்டை மாணவர்கள்

(மன்னார்)

மன்னார் - பாப்பாமோட்டைப் பிர தேசதத்தில் பொது நூலகம் இன்மை யால், இந்தப்பகுதி மாணவர்களும், மக்களும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

1999 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தப பகுதியில் இயங்கிவந்த நூல கம், 1999 ஆம் ஆண்டு இராணுவத் தினர் மேற்கொண்ட ரணகோஷ படைநடவடிக்கையினபோது முற்றாக அழிக்கப்பட்டதுடன், இந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர்.

தற்போது இவர்கள் மீளக் குடிய மர்ந்துள்ள நிலையில், இங்கு நூலகம் ஒன்று அமைக்கப்படாததால் இந் தப்பகுதி மாணவர்கள், மக்கள் தமது நூலகத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத நிலையில் உள் ளனர்.




# அடிப்படை வசதியின்றி வாழும் மன்னார் – பதவிக்குளம் மக்கள்

(மன்னார்)

மன்னார் - பதவிக்குளம், சன் னார் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தமது அடிப்படை வசதிக ளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்ற னர்.

1999 ஆம் ஆண்டு இராணுவத் தினர் மேற்கொண்ட ரணகோஷ நட வடிக்கை மூலம் இடம்பெயர்ந்த இந் தப் பிரதேச மக்கள் - தற்போது மீளக் குடியமர்ந்துள்ள நிலையில், இவர்க ளுக்கான அடிப்படை வசதிகள் எது வும் செய்துகொடுக்கப்படவில்லை யென இந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### உழவு இயந்திர ஓட்டுநர்களுக்கு ஒழுங்குபற்றிய கலந்துரையாடல்

துணுக்காய் - பாண்டியன் குளம் பிரதேச உழவு இயந்திர ஓட்டுனர்க ளுக்கான வீதி ஒழுங்கு பற்றிய கலந்துரையாடல் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.

துணுக்காய் காவல்துறைப் பணி மனையால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக் கலந்துரையாடல் பாண்டி யன்குளம் மகாவித்தியாலயத்தில் காலை 10 மணிக்கும், அன்றைய தினம் மாலை 3 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள் ளது.

இந்தக் கலந்துரையாடலில் துணுக்காய் காவல்துறை பணிமனை பொறுப்பதிகாரி கமலசிறீதரன் வீதி ஒழுங்கு தொடர்பான கருத்துக் களை வழங்கவுள்ளார்.

துணுக்காய் பிரதேசத்திலுள்ள அனைத்து உழவு இயந்திர உரிமை யாளர்களையும், சாரதிகளையும் இந் தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு துணுக்காய் தமிழீழ காவல்துறையினர் தெரிவித் தனர்.

### கிடுகு வழங்கல்

இராமநாதபுரம் - ஆலடிக் கிரா மத்திலுள்ள 50 குடும்பங்களுக்கான கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தால் ஜீவனோபாய திட்டத் தின்கீழ் வீடு வேய்வதற்கான கிடுகு கள் வழங்கப்பட்டது.

இந்தத் திட்டம் மாயவனூர் கிரா மத்தின் புனர்வாழ்வுக்கழக அனுசர ணையுடன், ஒக்ஸ்பாம் நிதியுதவியு டன் மீளவும் வீடுகள் வேய்வதற்காக குடும்பம் ஒன்றுக்கு 150 கிடுகுகள் வீதம் வழங்கப்பட்டன. (இ)

### மாதர் அபிவிருத்தி சங்கத்தின் மூலம் கடனுதவி

முழங்காவில் நாச்சிக்குடா பிர தேச மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் சுயதொழில் கடன் வழங்கப்பட்டது. இந்தப் பிரதேசங்க ளுக்குட்பட்ட மக்களுக்கு ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, தையல் வேலை போன்ற சுயதொழில்களை மேற்கொள்வதற்கு யு.என்.எச்.சி.ஆர் இன் நிதியுதவி, மாதர் அபிவிருத்தி சங்கத்தின் மூலம் தலா 10 ஆயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபா வரை யில் கடன்தொகை வழங்கப்பட்டது.

### குழாய்மூலம் குடிநீர்வழங்கல்

கிளிநொச்சி - வட்டக்கச்சி பிர தேசத்தில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில் வாழ்கின்ற மக்களுக்கு குழாய் மூலம் நீர் வழங்கல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தப்பகுதி மக்கள் வரட்சிக் காலங்களில் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### யானை தாக்கியதில் ஒருவர் படுகாயம்

யானை தாக்கியதில் படுகாயம டைந்த குடும்பஸ்தர் ஒருவர் வவுனியா மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட் கிழமை இரவு 8.30 மணியளவில் வவுனியா நெடுங்கேணி நயினாமடு வுக்கும் குறிசுட்ட குளத்திற்கும் இடை யில் நிகழ்ந்தது. இந்தச் சம்பவத்தில் தனபாலசிங்கம் ஆசைப்பிள்ளை (வயது 44) என்பவரே படுகாயமடைந்த நிலை யில் வவுனியா பொது மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நிலத்தில் கிடந்தமை கால்கட்டும் காட்டும்*
*குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.*
திருக்குறள்

# நமது நோக்கு

## பலமற்ற அரசின் பங்காளிச் சண்டைகள்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவிக்கு வந்து வெறும் ஐந்து மாதங்களே கழிந்துள்ள நிலையில், அதன் எதிர் கால ஸ்திரத்தன்மை குறித்த சந்தேகம் வலுவாக எழத் தொடங்கியுள்ளது.

ஆட்சியை புதிய அரசு பொறுப்பேற்றதன் முதல் இதுகால வரைக்கும் அது தன் அறுதிப்பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கவில்லை என்பது ஒருபுறமிருக்க, இந்த ஐந்து மாத காலப் பகுதிக்குள் அரசு என்ன சாதித்துள்ளது என்ற கேள்விக்கு விடையெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பது சமாதான எதிர்ப்பு என்ற கோட்பாட்டை விட – வேறெந்த அரசியல் ரீதியிலான கொள்கை உடன்பாடுகளின் அடிப்படையிலும் ஒன்றித்த செயற்பாடுகளை ஒருபோதுமே கொண்டிராத கட்சி களின் கூட்டணியாக உருவானபோதே, தேசிய ரீதியில் மக்களுக்கு எந்தவிதத்திலும் நன்மை பயக்காத ஆட்சியொன்றினையே அதனால் அமைக்கக் கூடியதாக இருக்கும் என்பதை உணர்ந்துகொள்ளக் கூடியதாகவே இருந்தது.

அடிப்படையில் நீண்ட நெடுங்கால பகைமை உணர்வொன்றினை வளர்த்துவந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பிக்கும் இடையே ஏற்பட்ட தேர்தல் உடன்பாடானது, இருதரப்பினரதும் தனிப்பட்டதும் அவசரமானதுமான சுயநல அரசியல் அபிலாஷைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தே உருவாக்கப்பட்டதாகும்.

முன்னர் பதவியிலிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை பதவியிலிருந்து அகற்றுவதன் மூலம் சமாதான முன்னெடுப்பு முயற்சிகளுக்கு ஒரு நிரந்தர ஆப்பினை வைக்கலாமெனவும், மறுதேர்தல் ஒன்றில் கூட்டணி சேர்ந்து ஐ.தே.முன்னணியைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றிவிடலாம் என்றும் போட்ட திட்டத்தின் அடிப்படையிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற புதிய கூட்டணியை உருவாக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் உடன்பாடு கண்டன.

உண்மையில் இதில் இணைந்துகொண்ட பிரதான கட்சி கள் இரண்டுமே வெவ்வேறு உள்நோக்கங்களையும் வைத்திருந்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி – ஜே.வி.பியை தனக்கு பக்கபலமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டிருந்த அதே வேளை – ஜே.வி.பியோ சிறிலங்கா சுதந்திரக் கட்சியை தனது உயர்ச்சிக்கு ஏணியாகப் பயன்படுத்தும் உள்நோக்கத்தையே கொண்டிருந்தது.

ஆனால் இதில் வென்றதென்னவோ ஜே.வி.பிதான். தனித்து நின்று எக்காலத்திலும் பெறமுடியாத தேர்தல் வெற்றியை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான தேர்தல் தொகுதிப் பங்கீடு தொடர்பாக பேரம்பேசிப் பெற்றுக்கொண்ட தொகுதிகளில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு வாக்குகளைப் பெற்று தான் போட்டியிட்ட பெரும்பாலும் எல்லாத் தொகுதிகளிலும் வெற்றியை ஈட்டிக் கொண்டதுடன், ஜே.வி.பி. இல்லையேல் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியே இல்லை என்ற நிலையை உருவாக்கியும் விட்டது. அதுமட்டுமல்ல எந்தநேரமும் அரசையும் – ஏன் ஜனாதிபதியையும் கூட அச்சுறுத்தும் அளவுக்கு தன் ஆட்பல ஆளுமையை விருத்திசெய்துகொண்டது. இது ஜனாதிபதிக்குக் கிடைத்த மிக மோசமான இராஜதந்திரத் தோல்வியும், அரசியல் பின்னடைவுமாகும்.

சர்வாதிகாரம் கொண்ட ஜனாதிபதியை மிரட்டியும், அச்சுறுத்தியும், அழுத்தம் கொடுத்தும் நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியேயும் தனது நோக்கங்களை அபிலாஷைகளை நிறைவேற்றிவந்துள்ள ஜே.வி.பியை எந்தவகையிலும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஜனாதிபதியால் முடியவேயில்லை.

ஜே.வி.பியின் – அரசாங்கத்தினுள்ளான மேலாதிக்க வலுவானது ஜனாதிபதியால் தேசியப் பிரச்சினை தொடர்பாக எந்தவொரு தீர்க்கமான முடிவையும் சுயாதீனமாக எடுக்கமுடியாத நிலையை உருவாக்கியுள்ளதுடன், ஜே.வி.பியினரின் சுதந்திரமான செயற்பாடுகள், விமர்சனங்கள், கண்டனங்கள் அனைத்தும் ஜனாதிபதியின் ஆளுமையை வெளிப்படையாக அவமதிப்பதாகவும் அமைந்துவருகிறது.

அரசுக்குள் அங்கம் வகித்துக்கொண்டே அரசை விமர்சித்து தங்களை யோக்கியர்களாகவும் ஜனாதிபதி உட்பட அரசாங்கத்திலுள்ள ஏனைய அனைவரையும் தேசப்பற்றற்ற நபர்களாகவும் காட்டமுனைந்துள்ள ஜே.வி.பியின் அரசியல் நகர்வுகள் அடுத்த தேர்தலில் தாங்கள் மட்டுமே சிங்கள மக்களின் முழுமையான இரட்சகர்களாக இனங்காட்டி தனித்தே அரசமைக்கும் நோக்கத்தை இலக்குவைத்ததாகவே உள்ளது.

அரசு பலவீனமாக இருக்கும் நிலையில் அதனை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும் நோக்குடன் – ஜனாதிபதி ஜே.வி.பியுடனான விதிகளை மீறிச்செயற்படுவதாகவும் இதனை அவர் நிறுத்தாவிடின் அரசிலிருந்து ஜே.வி.பி. விலக நேரிடும் என்றும் ஜே.வி.பியினர் பகிரங்கமாக அறிவித்துள்ளமையானது ஜனாதிபதிக்கு சினத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

உண்மையில் இது ஜனாதிபதியை மிரட்டும் நடவடிக்கை என்றே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இந்த மிரட்டலுக்கு அவர் பணிவாரா அல்லது மாட்டாரா? என்ற கேள்விக்கான பதில் ஜனாதிபதியின் அடுத்தகட்ட நகர்வுகளிலேயே கூறமுடியும். இப்போதுள்ள நிலையில் சமாதான முயற்சிகளுக்கான ஐ.தே.கட்சியின் ஆதரவை சந்திரிகா பெற்றுக்கொண்டால் மட்டுமே ஜே.வி.பியின் அச்சுறுத்தலில் இருந்து விடுதலை பெறமுடியும் என்பதே உண்மை.

# நாடும் நடப்பும்




# அரசிலிருந்து விலகப்போவதாக ஜே.வி.பியினர் எச்சரிக்கை!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கடுமையாக வமர்சித்துள்ள ஜே.வி.பி. - இந்தச் சிக்கல்களுக்கு உரிய தீர்வு காணப்படாது விட்டால், அரசிலிருந்து விலகப் போவதாக எச்சரித்துள்ளது.

கடந்த 15 ஆம் திகதியன்று கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த அபாய எச்சரிக்கையை விடுத்த ஜே.வி.பி., சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட 4 பிரதி அமைச்சா பதவிகள் தொடர்பாக தம்முடன் கலந்துரையாடப்படவில்லை என்றும், இது இரு தரப்பினருக்கும் இடையேயான உடன்பாட்டை மீறும் செயல் எனவும் வாதிட்டது.

ஜே.வி.பியினரின் இந்த விமர்சனத்திற்குப் பின்னர் கலந்துரையாடலில் கலந்து கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியோடு அவசர கலந்துரையாடலுக்குத் தயார் எனக் கூறியபோதும், இது போன்ற கலந்துரையாடல அவசியமற்றது என சிறிலங்கா சுதந்திரக்கட்சி மறுத்துள்ளது.

கூட்டணியின் பொதுச்செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த, அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரும், ஜே.வி.பி. சார்பில் அதன் தலைமைச் செயலர் ரில்வின் சில்வா, நாடாளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்ச, அனுரகுமார திஸநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர். (தே)

## யாழ்.பல்கலை கல்விசாரா ஊழியர்கள் கௌரவிப்பு விழா!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தின் ஊழியர் கௌரவிப்பு விழா அடுத்தமாதம் 3 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இந்த விழாவில் கடந்த 30 வருடகாலத்திற்கும் மேலாக யாழ். பல்கலைக்கழகத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கும், சேவையில் உள்ள ஊழியர்களுக்கும் அவர்களது சேவையைப் பாராட்டி வெற்றிக்கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அன்றையதினம் கௌரவிக்கப்படவுள்ள சகல ஊழியர்களுக்கும் தேசிய உடையில் பல்கலைக்கழக வாசலில் இருந்து மேள வாத்தியங்கள் சகிதம் பரமேஸ்வரன் ஆலயத்துக்கு அழைத்துவரப்படவுள்ளனர்.

தொடர்ந்து இவர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சமயப் பெரியார்களால் ஆசியுரை வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் படவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் உட்பட கல்வித்துறை சார்ந்தோர் பங்குபற்றவுள்ளனர்.

## மொத்த வியாபாரிகளால் விவசாயிகள் பாதிப்பு

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய சந்தையில் கிழக்குப் புறமாக விற்பனைப் பொருட்களை நிறுக்கும் இடத்துக்கருகில் விவசாயிகள் தமது உறபத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கென அமைக்கப் பட்ட கட்டடப் பகுதிக்குள் வைத்து வியாபாரம் செய்து வந்தனா.

ஆனால், தற்போது வேறு சிலரால் இந்தக் கட்டடப் பகுதி ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது. மொத்த விற்பனையாளர், உருளைக் கிழங்கு போன்ற இறககுமதிப் பொருட்களை இந்தப் பகுதிக்குள் கொண்டு வந்து குவிப்பதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் படுகின்றனர்.

இதனால், விவசாயிகள் பலர் கட்டடத்திற்கு வெளியே தமது பொருட்களை வைத்து விற்பனை செய்து வருகின்றனர். இது தொடர்பாக சந்தைக் குத்தகைக்காரருக்குத் தெரியப்படுத்தி உடன் நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்டோரை பிரதேச செயலர் கேட்டுள்ளார். (13)

## பயிலுநர் பட்டதாரிகளுக்கான நடைமுறைகள் குறித்த சுற்றுநிருபம் யாழ். செயலகத்துக்கு அனுப்பிவைப்பு!

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிப் பயிலுநர்களாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளவர்கள் பின்பற்ற வேண்டிய கட்டாயமான நடைமுறைகள் தொடர்பான சுற்றறிக்கை நிதியமைச்சால் யாழ் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பயிற்சி ஆரம்பித்து 7 நாட்களுக்குள் சகல பட்டதாரிகளும் தம்மைப் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு பதிவு செய்து கொள்ளாதவர்கள் பின்பு பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

வாரத்தில் ஒரு நாள் அல்லது அரை நாள் ஒருவர் விடுமுறை எடுத்தாலும், அதற்கு வைத்தியச் சான்றிதழ் காட்டப்பட வேண்டும்.

ஒரு மாதத்தில் 7 நாட்களுக்கு மேல் லீவு எடுக்க முடியாது. அவ்வாறு லீவு பெறப்பட்டிருந்தால் அவர் பயிற்சியில இருந்து நீக்கப்படுவார்.

ஒருவர் லீவு எடுப்பதற்கு மருத்துவம் காரணமாக இருந்தால் மட்டுமே அனுமதிக்க வேண்டும்.

வைத்திய காரணத்துக்காக ஒருவர் லீவு எடுத்திருந்தாலும், அவரது ஒரு நாளுக்குரிய சம்பளம் வழங்கப்படமாட்டாது என்பன போன்ற விதிகள் பயிற்சிக் காலத்தின் போது கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா மாவட்டத்தில் கலாசார சீரழிவில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

அரசியல் துறையினர் எச்சரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் கலாசாரத்தை சீரழிக்கும் வகையில் சிலர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், இவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வவுனியா மாவட்ட அரசியல்துறையினர எச்சரித்துள்ளனர்.

வவுனியா நகர்ப்பகுதியில் அமைந்துள்ள விடுதியில் பிறமாவட்டத்தைச் சேர்ந்த நான்கு பெண்கள் தங்கியிருந்து விபசார நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து தாம் அவர்களைக் கைதுசெய்து எச்சரிக்கை செய்து விடுதலை செய்ததாகவும் தெரிவித்தனர்.

புலிகள் அரசியல் நடவடிக்கைக்கு வவுனியாவுக்கு வருவதற்கு முன்னர், இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று வந்தது. தற்போது இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிருப்பது கவலைக்குரியதே.

அத்துடன் வவுனியா குட்செட் வீதி, தேக்கவத்தை போன்ற பிரதேசங்களில் போதைப் பொருள் விற்பனை செய்வது தொடர்பாகத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் வவுனியா அரசியல் துறையினர் தெரிவித்தனர்.

தொல்லியல்

# சாட்டிக்குப் பெருமை தேடித்தரும் பழங்காலச் சுடுமண் கிணறு



சாட்டியில் தொடர்ச்சியாக தொல்லியல் அகழ்வாய்வை மேற்கொண்டு வரும் கலாநிதி ப. புஷ்பரட்ணம் தலைமையிலான பல்கலைக்கழக தொல்லியல் கற்கைநெறி மாணவர்கள் குழு - அண்மையில், 2000 வருடங்களுக்கு முற்பட்ட தென்பதை நிச்சயப்படுத்தக்கூடிய சுடு மண்ணால் செய்யப்பட்ட மிகப்பெரிய கிணறு ஒன்றை, 20 அடி ஆழம் கொண்ட தொல்லியல் அகழ்வாய்வுக் குழியில் இருந்து மீட்டெடுத்துள்ளனர்.

இந்தக் கிணறு மீட்கப்பட்டபோது அதன் வடிவமைப்பையும், தொழில் நுட்பத்திறனையும் நேரில் பார்வையிட்ட அந்த ஊர்ப் பொதுமக்கள் - இவ்வளவு நாகரீகம் படைத்த மக்கள் முன்பொரு காலத்தில் எமது பிர தேசத்தில் வாழ்ந்தார்கள் என்பதை அறியும்போது எமக்குப் பெருமையாகவும், ஆச்சரியமாகவும் இருப்பதாகக் கூறினார்கள்.

இந்தக் கிணறு அமைக்கப்பட்டதன் நோக்கம், அதன் காலம் தொடர்பாக கலாநிதி புஷ்பரத்தினத்திடம் எமது செய்தியாளர் கேட்டபோது, அவர் இந்தக் கிணறு கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் மையத்தில் தான் - முதன் முதலில் இயற்கையான பாறையில் வட்டமாக வடிவமைக்கப்பட்ட மேடையில் தாழியடக்க ஈமச்சின்னத்தைக் கண்டு பிடித்தோம்.

ஆனால், இந்த மேடையைச் சுற்றிப் பரந்த அளவில் செயற்கையான வடிவம் கொண்ட பாறைத் தொடர்களும், மட்பாண்ட ஓடுகளும் காணப்பட்டதால், கடந்த மூன்று நாட்களாக அந்த இடத்தில் தொடர்ந்தும் அகழ்வை மேற்கொண்டு வந்தோம்.

அப்போது முன்பு தாழியடக்க ஈமச்சின்னம் காணப்பட்ட மேடைக்கு வடக்கே - மிகச் சிறிய இடைவெளியில், இரண்டு அடி விட்டமுடைய இன்னொரு குழியடக்க ஈமச்சின்னம் இருந்ததைக் கண்டுபிடித்தோம்.

அந்தக் குழியடக்க ஈமச்சின்னம் (Pit Burial) இயற்கையான பாறையை வெட்டி அமைக்கப்பட்டிருந்தாலும், அந்தக் குழி - செயற்கையாக வடிவமைக்கப்பட்ட கற்களைக் கொண்டு வட்ட வடிவில் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்தது.

இந்த ஆய்வின்போது, ஐந்தடி ஆழத்தில் இரு கற் படுக்கைகளுக்கிடையே பலவகை எலும்புகளையும், மண்பாண்டங்களையும் கண்டு பிடித்தோம்.

இதிலிருந்து இந்த விடயம் ஒரு குடும்பத்தின் அல்லது குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் ஈமச்சின்னங்களாக இருந்துள்ளதை உறுதிப்படுத்த முடிகிறது. இவ்வாறான ஈமச் சின்னங்கள் தமிழகத்தில் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், இங்கிருந்த ஈமச்சின்னத்துக்கு கீழே - இயற்கை மண்ணை அடையாளம் காண்பதற்காகத் தொடர்ந்து அகழ்ந்தபோதுதான் சுடுமண்ணால் செய்யப்பட்ட கிணறு ஒன்று இருந்ததை கண்டு ஆச்சரியப் பட்டோம்.



பொதுவாக இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் வாழ்ந்த பெருங்கற்காலத் திராவிட மக்கள் - தாம் வாழ்ந்த மணற்பாங்கான இடங்களில் நீரை எடுப்பதற்காக அமைக்கப்பட்ட கிணறுகள்- மழை, காற்று போன்ற காரணங்களால் தூர்ந்து போகாதிருக்க, அந்தக் கிணறுகளைச் சுற்றி சுடுமண் வளையங்களைக் கொண்டு அமைத்திருந்தனர்.

இதற்குத் தமிழகத்தில் வசவசமுத்திரம், அதிரம்பாக்கம், வட இலங்கையில் - கிராஞ்சி போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் கிணறுகள், சிறந்த சான்றுகளாகும்.

ஆனால், சாட்டியில் ஈமச் சின்னத்துக்கு கீழே இந்தச் சுடுமண் கிணறு காணப்பட்டமை, பெருங்கற் காலப் பண்பாட்டு மக்களது வாழ்க்கை முறைக்கு முரண்பாடாகத் தெரிகிறது.

இதற்கு முன்பொரு காலத்தில் சுடுமண்ணால் வடிவமைக்கப்பட்ட கிணறு இருந்த இடம் - பின்னர் ஏதோ ஒரு காரணத்தால் கைவிடப்பட்டபோது, அந்த இடம் பிற்காலத்தில் ஈமச்சின்னங்கள் அமைக்கும் மையமாக மாறியிருக்க வேண்டும். இதையே சாட்டி . அகழ்வாய்வில் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்தலாம்.

சாட்டியில் கண்டுபிடித்த சுடுமண் கிணறு - ஏறத்தாழ 20 அடி ஆழத்திலிருந்து மீட்கப்பட்டதாகும். இது ஐந்து சுடுமண் வளைங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட நான்கடி உயரமான கிணறாகும்.

இந்தச் சுடுமண் வளையங்கள் ஒவ்வொன்றும் - ஒன்றரை அடி விட்டமும், இரண்டடித் தடிப்பும் ஒரு அடி உயரமும் கொண்டது. இது போன்ற கிணறு ஒன்றை 1991 ஆம் ஆண்டு பூநகரியில் கிராஞ்சி என்ற இடத்தில் கண்டுபிடித்திருந்தோம்.

அது காபன்காலக் கணிப்பின்படி இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முற்பட்டதென உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால், அதன் காலத்துடன் சாட்டியில் கிடைத்த சுடுமண் கிணற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சாட்டியில் நீரும், சேறும் நிறைந்த பகு தியில் நான்கு மண் வளைங்களை - பல சிரமத்தின் மத்தியில் மீட்டெடுத்த நாம், அடியிலிருந்த இன்னொரு மண்வளையத்தை முழுமையாக எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது, சுற்றிவர இருந்த பாறைகள் இடிந்து வீழ்ந்து, அதில மூன்று மாணவர்கள் காயப்பட்டதால், எமது இறுதி முயற்சியைத் தற்காலி கமாக இடைநிறுத்த வேண்டியேற் பட்டுள்ளது.

ஆயினும் ஏனைய இடங்களில் தொடர்ந்தும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகள் நடைபெறும் இடங்களை எமது துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ், கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சத்தியசீலன், புவியியற் துறைத் தலைவர் பேராசிரியர் கா. குகபாலன், பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள், பொது அமைப்புக்கள், அரச அதிகாரிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருவது - ஆய்வாளர்களுக்கு ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் கொடுப்பதாக உள்ளது.

---

செய்திக் கட்டுரை

ஆர்.கே.மேனன்

# முறையான இடமாற்ற நடைமுறை தீவக வலயத்துக்குள் அவசியம்

தீவக வலயத்துக்குள் வேறு கல்வி வலயங்களைப் போன்று இல்லாது, இருவேறு வடிவங்களில் பாடசாலைகள் உண்டு. அவையாதெனில், கடல் கடந்த பிரதேசப் பாடசாலைகள், தலைமார்க்கப் பிரதேச பாடசாலைகள்.

இதனால் இந்தத் தீவக வலயத்தில் மற்றைய வலயங்களைவிட முறையான ஒரு உள்ளக இடமாற்ற ஒழுங்குமுறை தேவை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

கடல் கடந்த பிரதேசங்களாகிய நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற பிரதேசங்களிலுள்ள ஆசிரியர்கள் - அந்தந்தப் பிரதேசங்களில் கடமையாற்றுவதில் பெரும் சிரமமேதுமில்லை.

அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுகின்ற போதுதான், கடல் கடக்க வேண்டிய சிரமம் ஏற்படும். ஆனால், இந்தப் பிரதேசங்களில் கடமையாற்றுகின்ற யாழ். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் மிகவும் கஸ்ரமான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதுபற்றி சற்று அலசிப் பார்ப்போம்.

இந்தக் கடல்கடந்த பிரதேசங்களில் கடமையாற்றுகின்ற யாழ். ஆசிரியர்கள் - திங்கட்கிழமை காலை அந்தப் பிரதேசங்களுக்குச் செல்கின்றனர்.

கடல் கொந்தளிப்பு, ஆழக்கடல் என்ற பயம், அதிக வெபபங்களைச் சுமந்து சென்று, மீண்டும் வெள்ளி அல்லது சனிக்கிழமைகளில் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்புகின்றனர்.

புதிய இடங்கள் பழக்கப்படாத காரணத்தால் அதிக வெப்பம், உப்புத் தண்ணீர் ஒருவகை பூச்சிக்கடியால் நித்திரையின்மை எனப் பல துன்பங்களைச் சுமந்து கொண்டு, தமது சொந்த வீட்டுக் கடமைகள், பொறுப்புக்களைச் சரிவரச் செய்ய முடியாத நிலைமைகளில், வாரத்தில் முழுநாட்களையும் அந்தப் பிரதேசத்தில் கழிக்கின்றனர்.

இப்படிப்பட்ட துன்பங்களைத் தெரிந்தும், அந்தப் பிரதேசங்களிலும் மக்கள் வசிக்கின்றனர். கஷ்டப்பிரதேச மாணவர்களின் கல்வியில் தாமும் அக்கறை காட்டவேண்டுமென்ற நோக்கோடுதான் - இந்தப் பிரதேசங்களில் கடமைப் பொறுப்பை ஏற்று, இன்றுவரை அதைச் செய்து வருகின்றனர்.

இவர்களது ஊதியங்களை எடுத்துக் கொண்டாலும், மற்றைய ஆசிரியர்களைவிடச் செலவு அதிகமாகத் தானுள்ளது. தமது சாப்பாட்டுச் செலவு, போக்குவரத்துச் செலவு, காலநிலைகள் ஒத்துவராமையால் வருகின்ற மருத்துவச் செலவுகள் என அதிக செலவுகள் ஏற்பட்டும் கூட, பொறுமையுடன் கடமையாற்றி வருகின்றனர்.

இந்தப் பொறுமையைச் சோதிக்கின்ற வகையில், இந்த ஆசிரியர்கள் தள்ளப்படாது, நெருக்கீடுகளுக்கு விடையளிக்கும் முகமாக, ஒரு முறையான இடமாற்றம் அவசியம் தேவைப்படுகிறது.

கற்பித்தல் செயற்பாடு என்பது- மனமுரண்பாடுகள், நெருக்கீடுகளோடு செயற்படுத்த முடியாத தொன்று. இது ஒரு திடீர்வெளியீட்டைக் காண்பிக்கும் செயற்பாடு அல்ல. இது ஒரு பலகால கூட்டு முயற்சியால் வளர்க்கப்படும் பயிர்கள்.

இதையாரும் விருப்பின்றித் திணித்து, சரிவர செயற்படுத்த முடியாது என்பதும் யாவர்க்கும் தெரிந்த உண்மை. எந்த ஒரு தொழிலிலும் அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள் வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டுதான் இந்தப் பிரதேசங்களில் கடமையாற்றத் துணிந்து ஆசிரியர்கள் முன்வந்தார்கள்.

இப்படிப்பட்ட அர்ப்பணிப்புக்களை நியாயமற்ற முறையில் துஷ்பிரயோகிக்கப்படுகின்றபொழுது, அதை எந்த ஒரு அறிவுள்ள ஜீவனும் தாங்கிக்கொண்டு இருக்காது.

யாழ். கல்வி வலயத்தில் எத்தனையோ ஆசிரியர்களுக்கு கடற்கொந்தளிப்பு என்னவென்று தெரியாது. ஆழக்கடல் அலைகள் ஆட்டுகின்ற வள்ளத்தின் ஆபத்துக்கள் புரியாது. இரண்டு மணிக்குப் பின் - தமது குடும்பப் பொறுப்புக்களைத் தீர்க்கப் போதியளவு நேரமுண்டு.

யாழ். கல்வி வலய அதிகாரிகளுக்குத்தான் கடல் கடந்த பிரதேசங்களின் கஸ்டங்கள் தெரியாது என்றாலும், எங்கள் தீவக வலய அதிகாரிகளுக்குமா இது புரியாது? அவர்கள் நினைத்தால், உள்ளக இடமாற்றத்தில் ஒரு நியாயமான முறைமையைக் கொண்டுவர முடியும்.

வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்துறை, அல்லைப்பிட்டி போன்ற தரைமார்க்கப் பிரதேசங்களில் - வீடு சென்று வந்து கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், மூன்று வருட கஸ்டப்பிரதேச கடமை என்கின்ற பெயர்தான்.

ஆழக்கடல் கடந்த பிரதேசங்களில் கற்பிக்கும் - வீடு செல்லாத ஆசிரியர்களுக்கும் மூன்றுவருட கஸ்டப்பிரதேச கடமை என்ற பெயர்தான். தயவுசெய்து சற்று ஆழமாகச் சித்தித்துப் பாருங்கள். இது எவ்வளவு நியாயமானது?

இதற்கொரு தீர்வு கிடையாதா? தொடர்ந்தும் ஒரு சில ஆசிரியர்கள் தான் பாதிக்கப்படவேண்டுமா? இதற்கொரு நியாயமான உள்ளக இடமாற்றத் திட்டத்தை ஏன் கொண்டுவர முடியாது? கடல்கடந்த தீவுகளில் கடமையாற்றுகின்ற யாழ். ஆசிரியர்களுக்கு ஒருவருட பூர்த்தியின் பின், மிகுதி இரண்டு வருடங்களையோ அல்லது மூன்று வருடங்களையோ தரை மார்க்க கஸ்டப்பிரதேசங்களில் கடமையாற்றவேண்டுமென்றும், இரண்டு வருடத்தைத் தீவக வலய தரைமார்க்கப் பாடசாலைகளில் கடமையாற்றியவர்களை - ஒரு வருடம் கட்டாயம் கடல்கடந்த தீவுகளில் கடமையாற்ற வேண்டும் என்றும், கடல் துன்பத்தை உணர்ந்த தீவக வலய அதிகாரிகள் - இவ்வாறான முறையான இடமாற்றத்தை இனியாவது செய்வார்களா? என இந்த ஆசிரியர்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

இப்படியான திட்டத்துக்கு எந்த வகையான நிர்வாக இடர்பாடுகளும் ஏற்படச் சாத்தியமில்லை. ஆசிரியர்கள் மன முரண்பாடுகளோடு கற்பித்தல் செயற்பாடு வழிநடத்தாமல் இருப்பதைவிட, இப்படியான துன்பங்கள் நிறைந்த பிரதேசங்களில் இந்தச் செயற்பாட்டை மேற்கொள்ளலாம் அல்லவா?

ஒருவரைக் குறை கூறுவதற்காக இந்த நிலைப்பாட்டைக் கூறவில்லை. சற்று சிந்தித்துப் பாருங்கள். ஏன் ஒருவர் தனித்து கணவன், மனைவி, பிள்ளைகள், பெற்றோர்களைப் பிரிந்து இருந்து துன்பப்படவேண்டும். இதனைப் பலருக்குப் பகிர்ந்து கொடுக்கிறபோது எவருக்கும் துன்பம் வராது பார்க்கலாம் அல்லவா?

நியமனக் கடிதங்களில் மூன்று அல்லது நான்கு வருடங்கள் கஸ்டப்பிரதேசங்களில் கடமையாற்ற வேண்டுமென்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு இந்த ஆசிரியர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், கடல் கடந்த கஸ்டப்பிரதேசங்களுக்கு ஒரு வருடத்தையும் தரைமார்க்க கஸ்டப் பிரதேசங்களுக்கு மிகுதி வருடங்களையும் தரலாம் என்றுதான் வேண்டி நிற்கின்றனர்.

இந்த நிலையையுணர்ந்து ஆசிரியர் நலன் கொண்ட தீவக வலய அதிகாரிகள் - உணர்ந்து செயற்படுவார்கள் என இந்த ஆசிரியர்கள் நம்புகின்றனர்.

ஒருவருட தவணைமுடிவில் ஒரு ஆசிரியர் மற்றைய வகுப்புக்கு மாற்றப்படுகின்றார். இந்த நேரத்தல் இடமாற்றம் கொடுப்பதால் மாணவர்களை எந்த விதத்திலும் பாதிக்காது. தவணைக் கிடையில் மாற்றுவதால் தான், மாணவர்கள் பாதிப்படைவர்.

மன நெருக்கீடுகளோடு இருந்து, ஒரு ஆசிரியர் அடுத்த வருட மாணவர்களையும் பாழாக்குவதைவிட, இன்னொரு ஆசிரியர் மனத்தெளிவுடன் கட்டி எழுப்புவது மேல் அல்லவா?

ஒரு வருட கடல் கடந்த பிரதேசத்தை முடித்துச் செல்லும் ஆசிரியர்களும், தமக்கு யாழ். வலயத்தில் தருமாறு கேட்கவில்லையே? தரைமார்க்க கஸ்டப்பிரதேச உள்ளக இடமாற்றத்தைத்தானே வேண்டி நிற்கின்றனர்.

இதைதானும் அதிகாரிகள் செய்யாவிடின், நியாயமற்ற நிர்வாகம் நடத்தி என்ன பயன். மனித உரிமைகள், மனிதாபிமானங்களை அடிப்படையாகக் கொண்டுதான் சுற்று நிருபத்திலேயே கணவன் -மனைவி பிரிந்து வாழும் சந்தர்ப்பத்தில் இடமாற்றம் கோரமுடியும் என்றுள்ளது.

ஆகவே ஆழக்கடல் துன்பங்கள் நிறைந்த இந்தத் தீவக வலயத்தில் மற்றைய வலயங்களைப்போல் அல்லாது, இது நியாயமான ஒரு இடமாற்ற முறைமை தேவை என்பதை அனைவரும் உணர்ந்து செயற்படுவார்கள் என்று நம்பி, இந்த ஆசிரியர்கள் காத்துக் கிடக்கின்றனர். ◆

> **கற்பித்தல் செயற்பாடு என்பது~ மனமுரண்பாடுகள், நெருக்கீடுகளோடு செயற்படுத்த முடியாத தொன்று. இது ஒரு திடீர்வெளியீட்டைக் காண்பிக்கும் செயற்பாடு அல்ல. இது ஒரு பலகால கூட்டு முயற்சியால் வளர்க்கப்படும் பயிர் கள்.**

# கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வீரப்பனின் சடலம் அடக்கம்!

## பொலிஸார் கெடுபிடி

(மேட்டூர்)

**தமிழக அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சந்தனக் கடத்தல் வீரப்பனின் உடல் நேற்றுக்காலை மேட்டூர் அருகே உள்ள மூலக்காட்டில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அடக்கம் செய்யப்பட்டது.**

**வீரப்பனின் சகோதரர் மாதையன் இறுதிச் சடங்குகளைச் செய்தார். இறுதிச் சடங்குகளில் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி அவரது இரண்டு மகள்களும் மற்றும் ஏராளமான உறவினர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.**








வீரப்பனுடன் கொல்லப்பட்ட மூன்று கூட்டாளிகளின் சடலங்களுடன் வீரப்பனின் உடலும் தர்மபுரி அரச மருத்துவமனையில் வைக்கப்பட்டது. பின்னர் நான்கு உடல்களும் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

வீரப்பனின் உடலை அவரது மனைவி முத்துலட்சுமி பெற்றுக்கொண்டு, தனது சொந்த ஊரான மேட்டூருக்கு நேற்றுமுன்தினம் இரவு அம்புலன்ஸ் வாகனம் மூலம் கொண்டு சென்றார். மேட்டூர் அருகே உள்ள மூலக்காடு என்னும் வீரப்பனின் முதாதையர் வாழ்ந்த குக்கிராமத்திற்குச் சென்ற வாகனம் அவர்களுக்குச் சொந்தமான மயானத்திற்கு நள்ளிரவில் கொண்டுசென்று நிறுத்தப்பட்டது. நேற்று முன்தினம் இரவே உடனடியாக வீரப்பனின் உடலை எரிக்க வேண்டுமென்று பொலிஸார் கூறினார்கள்.

வீரப்பன் கொல்லப்பட்ட சம்பவம் நடந்து 24 மணி நேரம் கடந்துவிட்டதால், அதற்கு மேல் அவரது சடலத்தை வைத்திருப்பது நல்லதல்ல என்று பொலிஸார் தெரிவித்தனர். வீரப்பனின் உடலை வீட்டில் வைத்திருக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்று பொலிஸார் கூறியதால், வீரப்பனின் மனைவி மற்றும் உறவினர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. தங்கள் குல வழக்கப்படி, வீரப்பனின் உடலை எரிக்கப் போவதில்லை என்றும், பகல் நேரத்தில்தான் அடக்கம்செய்ய வேண்டுமென்றும் வீரப்பனின் உறவினர்கள் கூறியதால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த வீரப்பனின் சகோதரர் மாதையன், வீரப்பனின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக பரோலில் மேட்டூர்வந்தார். அவரும் வீரப்பன் உடல் அடக்கம்செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார். இதற்கிடையில் தந்தை பெரியார் திராவிடர் கழக தலைவர் கொளத்தூர் மணி, அவரது சட்டத்தரணி சந்திரசேகரனுடன் வந்து வீரப்பன் உடலை புதைக்க வேண்டுமென்று பொலிஸாரிடம் வாக்குவாதம் செய்தார்.

இறுதியில் நேற்றுக்காலை உடலை அடக்கம் செய்வதில் இரு தரப்பினருக்குமிடையே சமரசம் ஏற்பட்டது.

இதனையடுத்து நேற்றுக்காலை 6 மணியளவில் மூலக்காட்டில் உள்ள இடுகாட்டில் வீரப்பனுக்கு இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. மாதையன் இறுதிச் சடங்குகளை செய்தார். அந்த சடங்குகளின்போது வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி, அவரது மகள்கள் விஜயராணி என்கிற பாக்யா, யுவராணி என்கிற பிரபா, மாதையனின் மனைவி முனியம்மா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கொளத்தூர் மணி, புதுவையை சேர்ந்த பேராசிரியர் கல்யாணி, வீரப்பனின் சட்டத்தரணி சந்திரசேகரன், புருஷோத்தமன் உள்ளிட்டோர் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர். பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நடந்த இறுதிச் சடங்குகளில், அக்கம் பக்கத்து கிராமங்களை சேர்ந்த ஏராளமான பொதுமக்களும் கலந்துகொண்டனர். வீரப்பனின் உடல் இறுதியில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் மாதையனின் மகன் மணியின் புதைகுழி அருகே அடக்கம் செய்யப்பட்டது. (சட்டத்தரணிக்கு படித்துவந்த மாதையனின் மகன் மணி சில ஆண்டுகளுக்கு முன்பு விபத்தில் பலியானது குறிப்பிடத்தக்கது.)

வீரப்பனின் உடல் குழிக்குள் இறக்கப்பட்டபோது அவனது மனைவி முத்துலட்சுமி, மூத்த மகள் விஜயராணி மற்றும் உறவினர்கள் கதறி அழுதனர். இளைய மகள் பிரபா, நடப்பது என்னவென்று உணராமல் நின்றுகொண்டிருந்தார்.

இதற்கிடையே வீரப்பனின் உடலை தன்னிடம் ஒப்படைப்பதில் தாமதம் செய்ததாகவும், உடலை உடனே எரிக்க வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தியதாகவும் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி சேலம் மாவட்ட எஸ்.பி.பொன்மாணிக்கவேல் மீது புகார் தெரிவித்துள்ளார். முன்னதாகவே வீரப்பன் உடலை கொடுத்திருந்தால் அவரது சொந்த ஊரான கோபிதந்தத்திற்கு அதை எடுத்துச் சென்றிருப்போம் என்றும் அவர் கூறினார். வீரப்பனின் அனுதாபியான பெரியார் திராவிட கழக தலைவர் கொளத்தூர் மணியும், வீரப்பன் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்.

இது குறித்து மனித உரிமை ஆணையத்திடம் தாம் முறையிடப்போவதாக கொளத்தூர்மணி கூறினார்.

### இரகசியம் வெளிவராதிருக்க பொலிஸார்

# கைதுசெய்யப்பட்ட இரண்டு நாட்களில் வீரப்பனைக் கொலை செய்தனர்!

## திடுக்கிடும் தகவல் அம்பலமாகிறது



சந்தனக்கடத்தல் வீரப்பனின் உயிரிழபபுக் குறித்து முரண்பட்ட தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. அதிரடிப் படையினருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் வீரப்பன் உயிரிழந்தாரா? அல்லது பொலிஸார் அவரைக் கைதுசெய்து தனியே அழைத்துச்சென்று சுட்டுக்கொன்றார்களா? அல்லது வீரப்பன் தற்கொலை செய்துகொண்டாரா? என மூன்று விதமான சந்தேகங்கள் எழுந்துள்ளன.

முதலாவது சந்தேகம் வீரப்பனுக்கு உளவு பார்க்கும் கிராமவாசி பொலிஸ் பக்கம் சாய்ந்ததால் இந்த சம்பவம் நடந்ததா என்பதாகும். அதாவது வீரப்பனுக்கு உளவுபார்த்து வந்த கிராமவாசி ஒருவரை பொலிஸார் தங்கள் வசப்படுத்தி வீரப்பனைத் தீர்த்துக்கட்டியதாகத் தெரிகிறது.

நீண்டகாலமாகப் பார்வைக்குறைபாட்டால் அவதிப்பட்டுவந்த வீரப்பன் அதற்காக சிகிச்சை பெறவிரும்புவதாக அந்த கிராம வாசியிடம் கேட்டுள்ளார். அதற்கு அந்த கிராமவாசி தனக்குத் தெரிந்த ஒரு டொக்டரிடம் அழைத்துச் செல்வதாக உறுதி கூறினாராம்.

ஏற்கனவே பொலிஸார் சொல்லிக் கொடுத்தபடி பயணம் செய்வதற்கான வாகனத்தையும் தானே ஏற்பாடு செய்வதாக வீரப்பனிடம் அந்தக் கிராமவாசி கூறினார். இதையடுத்து ஏற்கனவே சந்தனக்கட்டை கடத்தி பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு வாகனத்தை அம்புலன்ஸ்போல தயார்செய்து அந்தக் கிராமவாசியிடம் அனுப்பிவைத்தனர். அம்புலன்ஸை செலுத்துவதற்கு பொலிஸார் ஒருவரையே சாரதியாக நியமித்தனர்.

கிராமவாசி வாகனத்துடன் வீரப்பனிடம் சென்று சிகிச்சைக்கு ஏற்பாடு செய்துவிட்டதாகக் கூறினாராம். இதை நம்பிய வீரப்பனும் அவரது கூட்டாளிகளும் வாகனத்தில் ஏறி அமர்ந்தனர் வீரப்பன் அமர்ந்ததும் வாகனம் புறப்படவேண்டும். 2 கிராமத்தைத் தாண்டியதும் 3 வது கிராமம் அருகே கரும்பு லொறி நிற்கும். அதன் அருகில் இந்த வாகனத்தை நிறுத்த வேண்டுமென அதிரடிப்படையினர் ஏற்கனவே அந்தப் பொலிஸ் சாரதியிடம் கூறியிருந்தனராம். வாகனம் வீரப்பனுடன் புறப்பட்டபோது சாரதி அருகே மற்றொருவரும் ஏறி அமர்ந்தாராம்.

இதை வீரப்பன் கடுமையாக ஆட்சேபித்தாராம். அதற்கு சாரதி எனக்கு மிகவும் வேண்டியவர் வழியில் இறங்கிவிடுவார் என்று ஒருவழியாய் வீரப்பனைச் சமாளித்தாராம்.

திட்டமிட்டபடி கரும்பு லொறி அருகில் வாகனம் வந்ததும் சாரதி வாகனத்தை நிறுத்தியதாகவும், வாகனத்தில் திடீரென விளக்கைப்போட்டு சாரதியும் அவருடன் இருந்த மற்றவரும் துப்பாக்கியால் வீரப்னையும், சேத்துக்குளி கோவிந்தனையும் சுட்டுவிட்டு கீழே குதித்து ஓடியதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே அங்கு தயாராகப் பதுங்கியிருந்த அதிரடிப்படையினர் வாகனத்தை நோக்கி சரமாரியாகச் சுட்டு, சல்லடை கண்களாகத் துளைத்தனர். இதில் வீரப்பனின் மற்றக் கூட்டாளிகளும் குண்டடிபட்டு உயிரிழந்தனர்.

வீரப்பன் உடலில் இடது கண் அருகே நெற்றியில் ஒரே ஒரு குண்டு மட்டுமே பாய்ந்திருப்பதாகப் படத்தில் தெரிகிறது. பொலிஸார் சரமாரியாகச் சுட்டபோது ஒரு குண்டு மட்டும் பட வாய்ப்பில்லை. அவர் உடலில் பல குண்டுகள் துளைத்திருக்கும் என்று கூறப்படுகிறது. எனவே துப்பாக்கிச் சண்டையில் வீரப்பன் இறந்திருப்பார் என்பது ஏற்க இயலாத நிலையில் உள்ளது.

எனவே, பொலிஸார் வீரப்பனையும் மற்றவர்களையும் வாகனத்தில் இருந்து இறக்கி தனியே அழைத்துச் சென்று மிக அருகில் வைத்தே சுட்டிருக்கிறார்கள் என்றும் கருத்து நிலவுகிறது.

மூன்றாவது சந்தேகம் வீரப்பனும் கூட்டாளிகளும் வாகனத்தில் வந்தபோது அதிரடிப்படையினர் கூறியபடி சாரதி வாகனத்தை நிறுத்திவிட்டு கீழேகுதித்து ஓடினார். உடனே பொலிஸ் அதிரடிப்படையினர் வாகனத்தை சுற்றிவளைத்ததை அறிந்த வீரப்பன் தப்பிக்க இயலாது என்பதை உணர்ந்து துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டதாகவும் அதைத் தொடர்ந்து சேத்துக்குளி கோவிந்தனும் தன்னைத் தானே சுட்டுக்கொண்டதாகவும் இன்னொரு தகவல் கூறுகின்றது. இந்தத் துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டபோது அதிரடிப்படையினர் வீரப்பன் பொலிஸைத் தாக்கத் தொடங்கிவிட்டதாக எண்ணி வாகனத்தை நோக்கி சரமாரியாகச் சுட்டனர். இதில் வாகனம் சல்லடைக்கண்ணாகத் துளைக்கப்பட்டு அதற்குள் இருந்த வீரப்பனின் மற்றக் கூட்டாளிகளும் உயிரிழந்திருக்க கூடும் என நம்பப்படுகிறது.

அதிரடிப்படையினர் சரமாரியாக வாகனத்தை சுட்டு சல்லடைக் கண்களாக ஆக்கியபோது, குண்டு மழையின் இடையே சிக்கிய வீரப்பனின் உடலில் ஒரேஒரு குண்டுமட்டுமே பாய்ந்தது என்று கூறுவது சந்தேகத்தைக் கிளப்புவதாக உள்ளது.

அந்தக் குண்டு வீரப்பன் துப்பாக்கியில் இருந்து வந்ததா? அல்லது அதிரடிப்படையினரின் துப்பாக்கியில் இருந்து வந்ததா? என்பது பிரேதபரிசோதனை அறிக்கையில் தான் தெரியவரும். அதன்பிறகுதான் வீரப்பன் தற்கொலை செய்துகொண்டாரா? அல்லது பொலிஸார் சுட்டுக்கொன்றார்களா? என்பது தெரியும்.

இதற்கிடையே மற்றொரு பரப்பரப்பான தகவலும் தெரியவந்துள்ளது. வீரப்பன் சுட்டுக்கொல்லப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே அவரை அதிரடிப்படையினர் சுற்றிவளைத்துப் பிடித்துவிட்டதாகவும், அவருக்கு நீரிழிவு நோய், கண்பார்வை மங்குதல் போன்ற நோய்கள் இருந்ததால் நடக்க முடியாத நிலையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பொலிஸ் வாகனத்திலேயே மருத்துவமனைக்கு கொண்டுசென்றனரா?

மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது அடையாளம் தெரியாமல் இருக்க வீரப்பனின் முறுக்குமீசையை பொலிஸார் வெட்டியதாகவும் மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சையளித்தபோது பல்வேறு தகவல்களை வீரப்பன் வெளியிட்டதாகவும் - இதனால், பல உண்மைகள் அம்பலத்துக்கு வரலாம் என்ற காரணத்தினால் அவரை உயிரோடு விட்டுவைக்கக்கூடாது என்று மேலிடத்து உத்தரவின் பேரில் சுட்டுக்கொன்றதாகவும் ஒரு தகவல் கூறுகின்றது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளை சந்திக்கவுள்ளதாக வெளியான செய்தியை மல்வத்த பீடாதிபதி மறுப்பு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தாம் சந்திக்கவிருப்பதாக வெளிவந்த செய்திகளில் எந்தவித உண்மையுமில்லையென மல்வத்த மகா நாயக்கர் திப்பொட்டுவே சுமங்கல தேரர் தெரிவித்தார்.

நேற்று அமைச்சுக்களின் செயலாளர்கள் தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு சகல அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். அத்துடன் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

சில அரசியல் கட்சிகள் ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட சமாதான ஆலோசனைச் சபையைக் கண்டிக்கின்றன. தேசிய நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் அந்தக் கட்சிகள் தமது ஆலோசனைகளைத் தெரிவிக்காமல் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக் கட்டையாக உள்ளன.

அரசியல் கட்சிகள் அனைத்தும் சமாதான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முன்வரவேண்டும். இது தொடர்பாகச் சகல அரசியல் கட்சிகளும் விரைவில் இணக்கப்பாட்டுக்கு வராவிட்டால், அந்தக் கட்சிகள் நடத்தும் நிகழ்வுகளில் மகா சங்கத்தினர் கலந்துகொள்ள மாட்டார்கள்.

அரசியலில் பிக்குகள் ஈடுபடுவதை மகா சங்கத்தினர் முற்று முழுதாக எதிர்க்கின்றனர். எனவே, ஜாதிக ஹெல உறுமயவினர் இந்த யதார்த்தத்தை உணரவேண்டும்.

சில ஊடகங்களில் வெளியான செய்திகளின்படி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டிய தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுருக்கிட்ட நிலையில் இளைஞனின் சடலம்!

## கொலையா? தற்கொலையா?

(கோண்டாவில்)

கோண்டாவில் டிப்போவுக்கு பின்புறத்திலுள்ள கிறேசர் வளவில் மரஉச்சியில் சுருக்கிட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

உரும்பிராய் செல்வபுரத்தை சேர்ந்த சின்னத்துரை தீஸ்வரன் (வயது -23) என்பவரது சடலமே இவ்வாறு சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் யாழ். நீதிவானுக்கு சடலம் குறித்துத் தெரியப்படுத்தினர்.

நீதிவானின் உத்தரவின்படி சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பொலிஸாரால் மாலை 6 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்நிலையில் இறந்தவர் கொலைசெய்யப்பட்டு தூக்கில் மாட்டப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (82)

# சச்சு மாஸ்ரர் கொலை

## சந்தேக நபரை அடுத்த தவணை நீதிமன்றில் ஆஜர்படுத்த உத்தரவு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் சச்சு மாஸ்ரர் உட்பட இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான சிறைக்கைதி மகேந்திரன் புவிதரனை, அடுத்த தவணையின்போது கட்டாயம் ஆஜர்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டது.

கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி கருணா குழுவைச் சேர்ந்த சச்சு மாஸ்ரர் எனப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன், தீபன் எனப்படும் சரவணமுத்து சாந்தகுமார் ஆகியோர் சிறைச்சாலைக்குள் வைத்து குறிப்பிட்ட கைதியால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சந்தேக நபரான இந்தச் சிறைக்கைதி பாதுகாப்பின் நிமித்தம் மொனராகலை சிறைச்சாலையில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரை மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு அழைத்து வருவதில் பதுகாப்புப் பிரச்சினைகள் இருப்பதாக காரணம்கூறி கடந்த 5 தவணைகளின்போது சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவில்லை.

5 ஆவது தவணையாகிய நேற்றுமுன்தினம் இதே காரணம் தெரிவிக்கப்பட்டபோது, எதிர்வரும் இரண்டாம் திகதிவரை சந்தேக நபரின் விளக்கமறியலை நீடித்த நீதிபதி - அன்றைய தினம் சந்தேக நபர் கட்டாயம் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

# ரோக்கியோவில் உறுதியளிக்கப்பட்ட கணிசமான நிதி கிடைத்துவிட்டதாம்!

## அரசாங்கம் கூறுகிறது

(கொழும்பு)

ரோக்கியோ உச்சிமாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட உதவித் தொகையில் கணிசமான அளவு கிடைத்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கடந்த வருடம் 62 கோடி அமெரிக்க டொலரும், கடந்த மாதம் மேலும் 32 கோடி 80 லட்சம் டொலரும் கிடைத்தது. நிதியமைச்சர் சரத் அமுனுகம தலைமையில் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்டது.

நிதியமைச்சின் செயலாளர் பி. விஜயசுந்தர - இலங்கையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக உதவி வழங்கும் நாடுகளின் பிரதி நிதிகளுக்கு எடுத்து விளக்கினார்.

இந்த வருட இறுதியில் மேலும் பெருந்தொகைப் பணத்தை உதவி வழங்கும் நாடுகள் வழங்குமென எதிர்பார்ப்பதாக அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ரோக்கியோ மாநாட்டின் நிதியைப் பயன்படுத்தி 255 அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இந்தத் திட்டங்களுக்கு செலவாகும் தொகை 420 கோடி டொலர்களுக்கும் கூடுதலாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் குறித்து கவனம் செலுத்துவதற்கு தேசிய சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேலும் உதவிகளைத் தொடர்ந்து வழங்க உலகவங்கி விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் நிதி அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

## சமாதான முயற்சி...

செல்வன் நோர்வே மற்றும் சர்வதேச செய்தியாளர்களை ரடிசன் ஹோட்டலில் நேற்று மாலை 3 மணியளவில் சந்தித்து விளக்கமளித்தார்.

இதில் புலிகளின் நிலைப்பாட்டை விளக்கிய அவர் - தமிழ் மக்கள் சமாதான முயற்சியில் நம்பிக்கையிழந்து வருவது குறித்து வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனுக்கு விபரமாக எடுத்துக் கூறினோம்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ். நோக்கி...

சுதந்திரபுரம் உடையார்கட்டைச் சேர்ந்த கனகலிங்கம் (வயது 40), எஸ்.இராசம்மா (வயது - 63) காயத்திரி(வயது -19) எஸ்.பிரசாத (வயது - 23), நடராசா (வயது 43) கண்ணன் (வயது - 19) புதுக்குடியிருப்பு முல்லைத்தீவைச் சேர்ந்த செ.கென்றி (வயது- 30) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

முகமாலையில் இருந்து பயணிகளுடன் யாழ்.நோக்கி வந்த மினி பஸ் நாவற்குழிப் பகுதியில் பஸ் ஒன்றை அதிவேகமாக முந்திச் செல்லமுற்பட்டபோது தடம் புரண்டதில் இரண்டு தடவை உருண்டது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர்கள் மேற்படி பாதையூடாக வந்த பஸ்ஸின் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டனர்.

இந்த விபத்தில் பஸ் நடத்துனர் காயமடைந்ததாகவும் சாரதி தப்பிவிட்டதாகவும் சம்பவ இடத்தில் நின்ற மக்கள் தெரிவித்தனர்.

## முஸ்லிம்...

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக, விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்து வெளியிடப்பட்டுள்ள தகவல்களின்படி -

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவிய கருணா குழுவினர் - ரோந்து சென்ற தமது போராளிகள் மீது மேற்கொண்ட தாக்குதலின்போதே இவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலமும் - பாதுகாப்புக் கருதி காட்டுக்குள் ஓடிய ஏனையவர்களும் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு நேற்றுக் காலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த முஸ்லிம் குடும்பஸ்தர் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பாக மட்டு, அம்பாறை மாவட்ட துணைத்தளபதி பிரபா முஸ்லிம் சமூக சமய பிரதிநிதிகளைச் சந்தித்து உண்மை நிலையைத் தெளிவுபடுத்தியதாக மட்டு, அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## தெகிவளையில்..

ஒழுங்கு நடவடிக்கை ஒன்றையடுத்தே இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டார்.

கிழக்கில் ஆயுதக் குழுக்களை உருவாக்கி விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவைப்பதில் சுட்டுக் கொல்லப்பட்ட மொகமட் சுரேஷ் காசிம் கூடிய அக்கறை செலுத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது. (01)

# சவுதியில் வாகன விபத்தில் 4 இலங்கைப் பெண்கள் பலி

(கொழும்பு)

சவுதியில் கடந்த ஞயிற்றுக் கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கைப் பணிப் பெண்கள் நால்வர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திலக்ஷி பிரியதர்ஷினி, அனுலா நீலகாந்தி, அனுஷிகா தில்றுக்ஷி, ப்ரிதிகா ஆகியோரே பலியானவர்களெனவும், மேலும் 20 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட நால்வரும் சவுதியில் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபட்டவர்களெனவும் இவர்கள் அனைவரும் சவுதியின் நஜாப் என்ற நகரிலிருந்து றியாத் நகர் நோக்கி பேரூந்து ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த வேளை சாரதியின் கவனக்குறைவினாலேயே இந்த விபத்து நேர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் தொடர்பான விபரங்களைப் பெறுவதற்கு கொழும்பிலுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சின் அலுவலக தொலைபேசி இலக்கமான 0114718972 இற்கு தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## திருமலையில்...

இறந்தவரின் உடலில் நான்கு துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருப்பதாக திருகோணமலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (10,04)

## மாம்பழம்...

பழம் சந்திக்கு அண்மையில் விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தையடுத்து வீதியை விட்டிறங்கிய பஸ்களில் ஒன்று அருகிலுள்ள குளத்தினுள்ளும், இன்னொன்று மதகினுள்ளேயும் பாய்ந்தன. எனினும், இந்த விபத்தில் - பயணிகள் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவத்தில் இரண்டு பஸ்களும் பலத்த சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய லொத்தர் சபை | மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல:- 1658 திகதி:- 19.10.2004

வெற்றி இலக்கங்கள்

D 1 3 9 7 0 3

அடுத்த சுப்பர் பரிசு 386 லட்சத்துக்குமேல்

## மரண அறிவித்தல்

### அன்ரன் கிறிஸ்தோப்பர்

பழைய பூங்கா வீதி கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட அன்ரன் கிறிஸ்தோப்பர் காலமாகிவிட்டார். அன்னார் செபஸ்தியாம்பிள்ளை றீட்ராடள்சி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், ஜெயாவின் அன்புக் கணவரும், துசிதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கரோலின் (புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்), சரோன் (யாழ். மத்திய கல்லூரி), நிரோன் (யாழ்.மத்திய கல்லூரி), மதுஷன் (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 3.30 மணியளவில் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல் :*
ஜெயா (மனைவி)

## நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்கு முக்கிய அறிவித்தல்

நிர்மாண ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ளும் ஒப்பந்த காரர்களும் ஒப்பந்த வேலைகளைச் செய்யும் பொது அமைப்புக்களும் இந்த நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

காலம் : 23.10.2004 சனிக்கிழமை
முற்பகல் 10.45 மணி

இடம் : யாழ். ப.நோ.கூ.சங்க மண்டபம்
கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்

(996) - பொறியியல் நிர்வாகம்.

சர்வதேச நாணயங்களுக்கான இலங்கை வங்கியின் நாணயமாற்று விகிதங்கள் வருமாறு

| நாணயங்கள் | கொள்விலை ரூ.ச | விற்பனைவிலை ரூ.ச |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 103.54 | 104.33 |
| ஸ்டேலிங் பவுண் | 186.15 | 188.51 |
| யூரோ | 121.50 | 130.98 |
| சுவிஸ் பிராங் | 82.06 | 83.36 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.